151

M. 180

Vol. III. No. 1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1925
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :
கே. எஸ். மூத்தையா & கோ., சென்னை.

விலை ரூ. 2	விலை ரூ. 2

சரோஜனி

தமிழ் உலகமே பிரமித்து வியக்கத்தக்க ஓர் அதியற்புதம் வாய்ந்த சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் நாவல்.

அழகே ஓர் உருவமாய் அமைந்த 10 சித்திரப் படங்கள் அடங்கியது.

எல்லாப் படங்களும் வங்காள நகரத்திலிருந்து வந்துள்ள ஒரு பிரபல சித்திரக்காரரைக் கொண்டு எழுதப்பட்டன.

புஸ்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டால் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளைக் கவனிக்க மாட்டீர்களென்பது நிச்சயம்.

அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் இது! இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக உருசிப்பது இந்த நாவல் தான்.

M. S. ராமுலு & கம்பெனி,
(லி) புத்தக வியாபாரிகள்,
இராயபுரம், மதராஸ்.

"லக்ஷ்மி," சென்னை.

சென்னை, சர்வ கலாசாலையில் இவ்வருஷம் பி.ஏ. பரீட்சையில் பட்டம் பெற்ற மாணவிகள்.

ஓம்

லக்ஷ்மி

THE REGISTRAR OF BOOKS
10 OCT 1925
MADRAS

2/1035

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௩. | குரோதனஸூ ஆவணிமீ 1925 ஆகஸ்டு | இதழ் க.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	3
2.	லக்ஷ்மியின் மூன்றுவதாண்டு... ...	4
3.	விநாயக மூர்த்தியும் அறுகம் புல்லும் ...	5
4.	ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம் ...	8
5.	கொடுங் காற்று	15
6.	அநுமன் தூதனு?	19
7.	தாய்த் தொண்டு	23
8.	முற்பிறப்புச் சரித்திரங்கள்	26
9.	சித்திரப் பத்தி	42
10.	பத்திராதிபர் குறிப்புகள்	46
11.	இலங்காபுரி	50
12.	ஜர்மன் வர்த்தகம் எப்படி விருத்தியடைகிறது?	51

சித்திரப் படம்.

சென்னை சர்வ கலாசாலையில் பட்டம் பெற்ற மாணவிகள்,

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.

ஸ்ரீமதி பச்சம்மா வேங்கடரத்தினம் யம். ஏ.

சென்னை-600 008

ஓம்

லக்ஷ்மி துதி

செந்தா மரை யுறையுஞ்
சேயிழையை, மூவுலகும்
தந்தா தரிக்குந் தனி முதலை—
நந்தாது
மாயன் மறு மார்பில் மன்னும்
மணி விளக்கை
ஆயும் மனமே அடை.

லக்ஷ்மியின் மூன்ருவ தாண்டு.

தமி ழகத்தின் ஆதரவால் "லக்ஷ்மி"க்கு இரண்டாவ தாண்டு இனிது நிறைவேறி மூன்ருவ தாண்டு தொடங்கி யிருக்கிறது.

இனி மூன்ருவது வயதில் "லக்ஷ்மி" முன்னேவிட மும்முரமாய்த் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் மற்றும் எல்லாத் துறைகளிலும் தொண்டு செய்வாள்.

நமது சக்திக் கியன்றவரை சகல துறைகளிலும் இது காறும் கடனுற்றி வந்தோம். தேசபக்தி, பாஷாபிமானம், அன்பு, ஒற்றுமை, சுகாதார முதலியனபற்றிப் பல வியாசங்கள் லக்ஷ்மியில் மாதந் தோறும் வெளி வந்து கொண்டிருந்தன. இரண்டு வயது வரை அன்புடன் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி ஆதரித்து வந்த அன்பர்கட்கும் வியாசம் எழுதி வந்த அறிஞர்கட்கும் நமது நன்றியறிதலை அன்புடன் தெரிவிக்கிருேம்.

இரண்டாவதாண்டு ஆரம்பத்திலே பத்திரிகையை எண்பது பக்கமாக்கிச் சந்தாவையும் மூன்று ரூபாயாக உயர்த்த வேண்டு மென்று பல நண்பர்கள் கேட்டிருந்தும் பக்கங்களை அதிகப்படுத்தினேமே யன்றிச் சந்தாவை உயர்த்த வில்லை இந்த மூன்ருவதாண்டில் லக்ஷ்மியை முன்னிலும் பல வழிகளில் சீர்ப்படுத்த வேண்டு மென்று கருதியிருக்கிருேம். அதற்குச் சந்தா நேயர்களின் அன்பையும் ஆதரவையும் பெரிதும் எதிர் நோக்கி யிருக்கிருேம். இப்பொழுதுள்ள இரண்டு ரூபாய் சந்தாவிலேயே லக்ஷ்மியை இன்னும் செம்மை பெறச் செய்ய கருதுவதால் சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்களுக்கும் உற்ருர் உறவினர்களுக்கும் சிபார்சு செய்து தலைக்கு ஒரு சந்தாதார் வீதமாவது சேர்த்துக் கொடுத்துத் துணை புரியுமாறு வேண்டுகின்ருேம்.

எல்லோருக்கும் இறைவன் திருவருள் புரிக!

விநாயக மூர்த்தியும்
அறுகம் புல்லும்

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, யம். ஏ. எழுதியது.)

குரோதன ஆண்டு ஆவணி மாதம் எட்டாந் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று। விநாயக சதுர்த்தி. விநாயகரைப் பூஜை செய்ய விரும்புகின்றோம். சிவ பெருமானுக்கு வில்வம் உகந்தது. திருமாலுக்கு விருப்பம் துளசி. முருகருக்குப் பிரீதி கடம்பும் வெட்சியும். விநாயகருக்கு வேண்டியது எது? "அறுகம் புல்" என்பதே. இதன் உண்மையை விநாயக புராணம் ஒரு கதை மூலமாகக் காட்டுகின்றது. அக்கதை வருமாறு :—

அவந்தி என்னும் நகரத்திற் சுலபன் என்றொரு அரசன் இருந்தான். அவன் மனைவியின் பெயர் சுபத்திரை. சுலபன் தரும நீதி தவறாது அரசாளுங் காலத்து வறுமையில் மூழ்கிய மதுசூதனன் என்னும் பத்தி முதிர்ந்த பிராமணன் ஒருவன் கிழிந்த தொரு மரவுரி தரித்தவனாய் அரசனிடத்து ஐயம் ஏற்க வந்தனன். இரப்பவர் இன்பமுற ஈயும் பெருங் குணத்துச் செல்வனாகிய அம் மன்னன் அன்று வினை வசத்திற் பட்டவனாய் அம் மறையவனது கிழியுடையை நோக்கி நகைத்தனன். அரையன் நகைத்ததைக் கண்ட அந்தணன் வெகுண்டு, "ஏ! இறைவ! நீ சிறிதுங் கல்வத்துறை கண்டிலை. செல்வ மமதை நிரம்பிச் சிரித்தனை யன்றோ? அச்சிரிப்பு என் உள்ளத்தை அழித்தது. உன் குலத்தையும் அழிக்கப் போகின்றது. பசுவின் மீது காமவெறி கொண்டலையும் காளை போலச் செருக்குற்ற நீ உழவு மாடாகிப் புல்லுண்ணக் கடவை" எனச்சபித்தான். இச் சாபமொழியை அரசன் அருகில் நின்ற சுபத்திரை கேட்டுப் பொறாளாய் "ஏ! பனவ, அறிந்தோ அறியாமலோ ஒருவர் பிழை செய்யின் அறிவுள்ள பெரியோர் குற்றம் பாராட்டாது பொறுப்ப ரன்றோ? அவ்வழியைவிட்டு

நல்லது கெட்டது தெரியாத கழுதை போல அரசனென்றும் பாராது சாபமிட்ட நீ—கழுதையாகி—வண்ணார் கையிற்பட்டு முதுகு நெளிய மூட்டை சுமந்து நித்தலும் வருந்துவா யாக" என அம் மறையவனைச் சபித்தனள். இக் கொடிய சாபத்தைக் கேட்ட மறையோன் குற்றம் உங்கள்பா லிருக்க என்னை வேண்டிச் சாபம் நீங்கும் வழியைக் கேளாது பேதை போல எதிர்ச் சாபந் தந்தனை. நீ உடனே புலைச்சியாகித் துன்புறுவாயாக என அரையன் மனைவிக்குச் சாபந் தந்தனன். இங்ஙனம் ஒருவருக் கொருவர் இட்ட சாபத்தின் பயனால் அரசனாயிருந்த சுலபன் உழவு மாடாகி உழைத்து நொந்தனன். அந்தண முதல்வனும் மதுசூதனன் கத்தபம் [2] ஆகிக் கஷ்ட முற்றனன். சுபத்திரை புலைச்சியாகிப் பறையர் சேரியில் வறுமையிற் பட்டு வாடினள். இங்ஙனம் பல நாளாக ஒரு நாள் மாலைக்காலத்தில் புலைச்சி புல்லறுத்துக் கட்டாகக் கட்டி விலைக்கு விற்கத் தலைமீது சுமந்து கொண்டு வரும்போது திடீரெனக் காற்றும் மழையுங் கடுமையாக வர அவள் மழைக்கு அஞ்சி அருகிலிருந்த ஒரு விநாயகர் கோயிலுக்குச் சமீபத்தில் ஒதுங்கி நின்றனள். மழையிலும் காற்றிலும் உழவன் கையினின்று மீறி ஓடி வந்த ஏறு புல்லுச்சுமை தாங்கி நின்ற புலைச்சியை நோக்கி ஓடிவந்து புல்லை யிழுத்தது. அருகில் ஓரிடத்து மேய்ந்திருந்த [3] காரமும் அங்கு வந்து அப்புல்லை யிழுக்க முயன்றது. இதைக் கண்ட புலைச்சி புற்சுமையைக் கீழிறக்கிக் கழுதையைக் கையிலிருந்த தடியால் அடித்தனள். [4] கோகு கத்திக்கொண்டே பக்கத்திலிருந்த ஏற்றை உதைத்தது. உடனே [5] புல்லம் கழுதையைத் தனது கொம்பாற் குத்திற்று. இங்ஙனம் நடக்குங் கோலத்தை விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி தினத்தன்று நிரம்பக் குழுமி யிருந்த ஜனங்கள் கண்டு மூவரையுந் தடிகொண்டு புடைக்கப் புலைச்சி கையிலிருந்தும் விடையின் வாயினின்றும் [1] வேசரி வாயினின்றும் புல் கீழேவிழ மூவரும் அடிக்கு அஞ்சி அவ்விருட்டில் விநாயகர் கோயிலைச் சுற்றினாற் போல வலமாக ஓடினர். அப்போது அடித்த சூறைக் காற்றினால் அங்ஙனம விழுந்த புல்

---

1. பனனன் = பிராமணன். 2. கத்தபம் = சமுதை. 3 காரம் = கழுதை 4 கோகு = சமுதை. 5. புல்லம் = எருது.

வில் புலேச்சி கையினின்று வீழ்ந்த அறுகம் புல் விநாயக மூர்த்தியின் உச்சியில் வந்து விழுந்தது. எற்றின் வாயினின்றும் விழுந்த அறுகம் புல் மூர்த்தியின் துதிக்கை மீது விழுந்தது, கழுதையின் வாயிலிருந்து விழுந்த புல் அவர் பாதத்தின் மீது வந்து விழுந்தது. இதனைக் கண்ட கோயிலார் அசுத்தியும் அபசாரமும் நேர்ந்தன என நினைத்து ஆலயம் முழுவதும் கழுவிக் கலசம் ஸ்தாபித்து விநாயக மூர்த்திக்கு அபிஷேக முதலியன செய்து பரிசுத்தஞ் செய்தனர். கோயிலார் கையில் அடிபட்ட புலேச்சி முதல் மூவரும் அவ்வடியின் கொடுமையாலும் மழை, வறுமை இவைகளிற் பட்ட துன்பத்தாலும இறந்து பட்டனர். உடனே சிவ கணங்கள் வந்து விமானத்தில் இவர்களை எற்றிச் சிவலோகஞ் செல்ல அங்கிருந்த அருந்தவ முனிவர்கள் இம் மூவருஞ் செய்த தவம் யாது என வினவச் சிவகணங்கள் "இவர் மாட்டிருந்த அறுகம் புல் விநாயக மூர்த்தியின் மாட்டுச் சேர்ந்த பெரும் புண்ணியம் இவர்களுக்குக் கூடிற்று, அதனுல் சிவலோகஞ் சேர்ந்தனர்" என விடை யளித்தனர். காற்றின் வசத்தால கணபதி மாட்டுச் சென்ற அறுகம் புல் கதியளித்த தென்ருல், அன்பு ததும்பின மனத்துடன் ஐங்கர மூர்த்தியை அறுகம் புல்லாற் பூசனை செய்தால் அதனுல் வரும் பயன் யாவரே உரைக்க வல்லார்?

குறைந்த படிக்கல்லுகளை உபயோகப்படுத்தியதாக.

ஜார்ஜ டவுனில் அரிசி, எண்ணெய், நெய் வியாபாரம் செய்து வரும் 16 கடைக்காரர்கள் குறைவான படிக்கல்லுகளை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்ததாக இரண்டாவது பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டதில் மாஜிஸ்டிரேட் தீர்ப்புச் சொன்ஞர். போலீசார் திடீரென்று எதிரி கடைகளைப் பரிசோதனை செய்து படிக்கல்லுகளை எடுத்துச் சென்றனர். இப்படிக் கல்லுகளை பரீட்சை செய்ததில் நிறை குறைவாக இருந்தன. மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு ரூ. 10 முதற் கொண்டு 50 வரையில் அபராதம் விதித்தார். மாஜிஸ்டிரேட் முத்துசாமி என்பவனுக்கு ரூ. 50 அபராதம் விதித்தார் இவருடைய கடையிலிருந்து எடுத்த படிக்கல்லானது மிகவும் குறைவாக இருந்தது.

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்

சரித்திரம்.

(ஸ்ரீமான் "முகம்மது ராம்" எழுதுகிறார்.)

(சென்ற 551 பக்கத் தொடர்ச்சி.)

சமுகத் திருத்தம்.

காற்றின் போக்கை யனுசரித்து உச்சிவா னிடை இலங்கும் காற்றாடியைப் போன்று பொது ஜன அபிப்பிராயத்திற்கு ஒத்தவாறு பேசியும் எழுதியும் தலைவர் எனப் பெயர் படைத்தல் மிக எளிது. மேலும் அந்நாட்களில் தலைவரென்று விளங்கியோரெல்லாம் பெரும்பாலும் இங்ஙனமே செய்து தலைமை யடைந்தவர்களெனக் கூறிவிடலாம். எனவே தலைவர் என்ற மொழிக்கும் பதவிக்கும் ஏற்றவாறிருந்தார் வெகு சிலரே. பொது ஜன உள்ளப் போக்காகின்ற நீர்ப் பெருக்கைத் திருப்பி உற்றவாறும் உரியவாறும் நன்மைக் காய்ப்பயன் படுத்தும் அணைகள் மதகுகள் போன்று தருவோரே தலைவராவர். ஆகவே, பொது ஜன அபிப்பிராயமும் அதனை நடத்தும் தலைவரின் அபிப்பிராயமும் முரண்படுகையில் தான் அத்தலைவருக்கு உண்மையான பரீட்சை ஏற்படுகின்றது. பொது ஜன அபிப்பிராயம் தவறுதல் கூடும்; அதனைத் திருத்துதல் தலைவர் கடனாகின்றது. ஆக, இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் நமது சுப்பிரமண்ய ஐயரவர்களின் தேசபக்தியின் விசாலத்தன்மையும், வீரத்தின் பரிசுத்தமும் வெள்ளிடை மலையென வெளியாகின்றன. 1889 வரை நாளுக்கு நாள் வெகுதீவிரமாய் உயர்ந்து உச்சிபுனைந்த ஐயரவர்களின் கீர்த்தியும் செல்வாக்கும் வெகு குறுகிய காலத்தில் தேய்ந்து தரையோடு தரையாய் விடும்போலாயதெனில், அதையும் அவர் பொருட் படுத்தினாரில்லை. ராஜீயவாழ்வுக்கு ஊனம் நேர்ந்தாலும் போகிறதென்றாலும், தமது சமுகவாழ்வுக்கே பங்கம் நேரவுற்ற அதிதீரமான செயல்களைத் தம் மனசாட்சியின் பொருட்டு மலைபோலும் கஷ்டங்களையும் இடைஞ்சல்களையும் எதிர்த்து முடித்தார் நமது ஐயர். அவைதான் சிறுவயதில் விதவையான தம் புதல்விக்கு மறுமணம் முடித்ததும் கடல் கடந்து லண்டனுக்குச் சென்றதும்.

இக்கலியின் ஓர் பெரிய விசித்திர மென்ன வெனில், திரிகரண சுத்தியாய் சுயநலம் வெறுத்து சமுகத்திற்காக உழைக்க முன் வருபவன் சடுதியில் பைத்தியக்காரன் எனவும் போக்கிரி எனவும் ஜனங்கள்பால் பட்டம் பெற்றுவிடுகிறான். மேல் அவன் நோக்கம் நிறைவேற இடமில்லை. உலகம் எவனையும் எளிதில் புத்திசாலி யென்றும் உபகாரி யென்றும் ஒப்பி விடுவதில்லை. இத்தகைய நிலைமையே தம் அருமைக் குமாரிக்கு மறுமணம் முடித்த ஐயரவர்களை நட்டாற்றில் நிறுத்திவிட்டது. நமது மதத்திற்கும் சமுகத்திற்கும் பொருத்த அநீதியாயும் அவச்கேடாயு மிருந்தவந்ததும் எண்ணிறந்த இளம் பெண்மணிகளின் வாழ்நாட்களையே, ஜன்மத்தையே பாழாய் அடிப்பதுமான ஓர் முறைமையை உதறிச் சிதறவடிக்க முழுதீரத்துடன் முனைந்து நின்ற நமது ஐயர் முன் மௌட்டீகத்தனமும், சுயநலமும்,

கோழைத்தனமுமாம் பைசாங்கள் பயமுறுத்தின. 1889 டிசம்பரில் தம் குடும்ப அபிப்பிராயத்தையும் கவனியாது பம்பாய் நகரின்கண் தேசிய மகாசபை கூடிய சுபமுகூர்த்தத்தில் அச்சபைக்கு வந்திருந்த தேசத் தலைவர்களையே புரோகிதர்களாகக் கொண்டு தம் புதல்விக்கு மறுமணத்தை நடத்திமுடித்தார். தேசத்தலைவர்களெல்லாம், பிரபல பத்திரிகைகளெல்லாம், கற்றறிந்தோரெல்லாம் அவரது தீரத்தை வாயாரப் புகழ்ந்து கொண்டாடினர். அதே தருணத்தில் தமது மாகாணத்தில் வைதிக பிச்சுகளின் நெற்றிக் கண் பொறி யெறிந்தது. பிராமண சமூகம் ஆத்திரத்தாலும், பழிவாங்கும் பொறாமையாலும், கடலெனக் கொந்தளித்தது. ஐயரவர்களின் நற்கீர்த்தியின் சிகரம் சரிந்துவிட்டது. கவலைமேல் கவலையும் கஷ்டத்தின்மேல் கஷ்டமும் தொடரலாயின. ஐயரவர்களின் மற்ற இரு குமாரிகளின் விவாகம் எங்ஙனம் நிறைவேறுமோ: என்ற சிந்தை வருத்தலாயிற்று. விதவா விவாகம் நடந்த ஆறும் மாதத்தில் நமது ஐயரின் பத்தினியார் பரமபதம் புக்கார். ஐயர் தம் குடும்ப வாழ்வில் சிறகொடிந்த பட்சி போல் ஆனார். உலகம் இச்சம்பவத்தைப் பலவாறாய் வியாக்கியானஞ் செய்யலாயிற்று. அதுவரை ஐயருடன் ஊடாடி வந்த ஒரு சில பந்து மித்திரரும் தலை மறைவாகிவிட்டனர். தீப்பற்றிய வீட்டில் உடல் வதங்கி வெளியேறிய ஒருவன் கிணற்றில் வீழ்ந்தாகிலும் வெப்பம் தணியலாமென்று நினைப்பது போன்று ஐயரவர்கள் சதியும் கிருஸ்துவ மதத்தில் தான் புகுந்து இந்தக் கொடுமைகளினின்று தப்பிக் கொள்ளலாமா என்று எண்ண வேண்டியதாகி விட்டதெனில் நாம் விரிக்கத் தேவையில்லை. ஐயருக்கு அவரது பந்து மித்திரர்களால் விதிக்கப்பட்ட ஜாதிப்பிரஷ்டம் எனும் கடுஞ் சிறையைக் கருதுமளவில் ஸ்ரீ லஜபதிராய், ஸ்ரீ திலகர் முதலானோர்க்கு அரசாங்கத்தார் விதித்த சிறை அத்துணை கொடிதன்று. சமூகத்தில் ஒருவன் பிரஷ்டன் ஆகிவிட்டால் அவன் தான் நிற்கும் அஸ்திவாரத்தையே இழந்துவிடுகிறானன்றோ? ராஜா ராம் மோகனராயர், ஈசுவர சந்திர வித்தியாசாகரர் வீரேசலிங்கம் முதலிய ஆசாரத்திருத்த மகான்களின் சரிதையைக் கவனிப்போருக்கு இவ்வுண்மை இன்னும் விசதமாம். இக்காலத்தும் மகாத்மா காந்தி தீண்டாமை யொழிக்க வேண்டும் என்று வற்புறுத்தும்போது அதே மனப்பான்மையுடன் வைதீகர்கள் ஒழுகுதலைக் காணலாம். நமது ஐயரவர்களின் இத்தகைய ஆசாரதிருத்தச் செயல்களால் அவர் தமது ராஜீயத்திருத்தங்களுக்காக உழைத்த நற்பெயரும் செல்வாக்குங்கூட அமிழ்ந்து விடுவதாயின. இதே காரணத்தால் தான் மற்ற மாகாணங்களில் ஐயரவர்களைவிடத் தேச ஊழியத்திலும், திறமையிலும் சிறியோராகியவர்கள் தேச மகாசபைக்குத் தலைவர்களாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருக்க நமது ஐயருக்கு அப்பதவி கிடைக்க நம் மாகாணத்தார் முயலவில்லை என்று கூறவேண்டும்.

என்றாலும், ஆசாரத்திருத்த வழியே நமது ஐயரின் ஊக்கம் மேன்மேலும் முன் சென்று கொண்டுதானிருந்தது. அவர் கவர்ன்

மென்டார் சமூகவிவகாரங்களில் தலையிடலாகாது என்ற கொள்கையுடையவராயினும் 1890-ல் ராஜப்பிரதிநிதி சட்டசபையில் கொண்டு வரப்பட்ட சம்மத வயது(Age of consent Bill) மசோதாவைத் தமது 'ஹிந்து' பத்திரிகையின் மூலமாய்ப் பலமாய் ஆதரித்தார். மீண்டும் 1892-ல் 'சென்னை ஹிந்து ஆசாரத்திருத்த சபை' என்றவொரு ஸ்தாபனத்தைத் துவக்கினர். இவ்வளவும் ஐயருக்குப் பெருத்த அசௌகரியங்களையும், அபகீர்த்தியையும், ஏராளமான பொருட் செலவையும் ஏற்படுத்தின என்பது திண்ணம். ஆம், காடாந்தகாரத்தில் உழலும் ஹிந்து சமூகத்திற்கு ஒளி கொடுப்பதென்றால் இலேசான காரியமா?

பிற போது நலச்செயல்கள்.

இனி, நமது ஐயரவர்கள் சரித்திரத்தின் பிற்பகுதியைச் சுருக்கமாகக் கூறி முடிப்போம். ஐயரவர்கள் பொது ஜனக்கல்வியைப் பரப்பக் காட்டிய சிரத்தையும் செய்த ஊழியங்களும் அவ்வப்போது தம் பத்திரிகையில் கவர்ன்மென்டுடன் மன்றுடியுள்ளதாலும் பொதுப் பிரசங்கங்களாலுந் தான் தெரியவரும். தமது நகரம் சம்பந்தப்பட்டமட்டில் அவர் 1894 முதல் 1903 வரை ஒன்பது வருஷ காலம் நகரசபைக் கமிஷனராயிருந்து சுகாதாரத்திற்கும், கல்விக்குமென்றே தமது திருவல்லிக்கேணி டிவிஷனில் 40,000 ரூபாய் வரை செலவிடச் செய்திருக் கின்றுரெனில் வேறு அத்தாட்சி தேவையின்று. 1896-ல் திருவல்லிக்கேணியில் 'ஆரிய இராப்பாடசாலை' என்ற தரும பாடசாலையை ஸ்தாபித்து ஐயரவர்கள் ஏழைகள் கல்வியறிவு பெறவு தனியாய்த் தாமும் தமது நண்பருமாகப் பொருட் செலவிட்டு நடத்தி வந்தார்.

1897-ல் நமது ஐயர் வெல்பி கமிஷன் முன்பு இந்திய அரசாங்க வரவு செலவு விவரங்களைப் பற்றி சாட்சியமும், அபிப்பிராயமும் கூற இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து இந்தியாவை கடல் படை, ராணுவம் முதலிய வைத்துக் காப்பதால் அதற்கே பலவகை லாபங்களிருப்பதால் அச்செலவினத்திற்கு இங்கிலாந்து தன் பணத்தையும் கொடுக்க வேண்டுமென்றும், இந்தியாவில் வெகு நீண்ட புகை வண்டிப் பாதைகள் ஏற்படுவதால் பிரஜைகளின் க்ஷேமம் அவ்வளவுக் கவ்வளவு நீண்டுவளர்கிறதென்பது வீண் மயக்கே யென்றும் நமது ஐயர் தாட்சண்யமும் தயக்கமுமின்றித் துணிவாய் பல மர்மங்களை எடுத்துரைத்தது அக்காலத்தில் மிக மெச்சற்குரிய செயலேயாகும். அன்றி, 'Some economic aspects of British Rule in India' என்ற பெயருடன் இங்கிலீஷில் அவர் வெளியிட்ட நூல் பொருளாதார ராஜீய விவகாரங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவையும் அநுபவத்தையும் விளக்குவதாகும்.

ஐயர் 1898-ல் 'ஹிந்து' வாம் வயது வந்த புத்திரனை விட்டுச் 'சுதேசமித்திர'னும் சிறு குழவியைக் கண்ணுங் கருத்துமாய் வளர்க்க முற்பட்டார். அப்போதே தமிழ் மக்களின் நற்காலமும் பிறந்தது. 'மித்திரன்' அடுத்த வருஷமே தினசரியாக வளர்ந்தோங்கினன்.

அதன் மூலமாய் ஐயரவர்கள் இனிய புராதனமான தமிழுக்குத் தற்கால ராஜீய, நாகரீக, சாஸ்திரீக விஷயங்களை எடுத்துரைக்கும் ஆற்றலை உண்டாக்கப் பெரிதும் அடிகோலினார் என்பது மிகையன்று. 'மித்திரனது' தொனி சற்று வடமொழிக்கலப்புடன் அந்நாட்களில் ஒரு தனி கம்பீரமும் அழகும் பொருந்தியிருந்தது யாவருமறிவர். ஐயரவர்கள் 'ஹிந்துவையும்,' பின் 'சுதேசமித்திரனையும் நடத்திவந்த காலத்து அவர் பால் சிஷ்யமுறையில் பத்திரிகைத் தொழில் பயின்றவர்கள் இந்நாளில் பெரும்புகழும், பதவிகளும் படைத்திருத்தல் காண்கிறோம். உதாரணமாக, 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' என்ற பிரபல ஆசாரதிருத்தப் பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீமான் கே. நடராஜன், மத்திய மாகாண சட்டசபை மந்திரிபதவி ஏற்ற ஸ்ரீமான் சி. ஒய். சிந்தாமணி, 'இந்தியன் பேட்ரியட்' என்ற பத்திரிகை ஆசிரியரும் சிறந்த தேச ஊழியருமான ஸ்ரீமான் ஸி. கருணாகரமேனன் போன்ற பலரைக் குறிப்பிடலாம். தமிழ்ப் பத்திரிகைத் தொழிலிலோ கூறத் தேவையில்லை.

கடைசி நாட்கள்.

ஐயரவர்களின் பிற்காலம் துன்பமும் துயரமும் தருவதாக முடிந்தது. தேகாரோக்கியம் குன்றி முன்போல தீவிரமாய் உழைக்க இடங்கொடுக்கவில்லை. என்றாலும், பத்திரிக்கைக் கெழுதுவதையும், கவர்ன்மென்டாரின் குற்றங்களையும், ஊழல்களையும் வெளிக்கொணர்ந்து ஜனங்கள் கட்சியை வலியுறுத்துவதிலும் களைக்கவில்லையாதலால், உண்மைத் தேசபக்தர்களுக்கெல்லாம் சன்மானம் போல் செய்துவருகிற சிறைவாசத்தை நமது ஐயருக்கும் கவர்ன்மென்டார் அளித்தனர். பின்னர் தம் மூடத்தனத்தை உணர்ந்து அவர்களே விரைவில் விடுதலை செய்தனர். அப்பால் நமது ஐயர் தமது எழுத்து மூலமாகவே மரணமட்டும் ஓயாதுழைத்தனர். நாம் பின்பற்றிப் பயனடைதற்குரிய 'ஜப்பான் சரித்திரத்தையும்' ஆசாரதிருத்த உபன்னியாசங்கள், ஜனநிர்மாணம் போன்ற சில அரிய நூல்களையும் எழுதி வெளியிட்டார். கடைசி நாள்மட்டும் தேசபக்தியுடன் தெய்வபக்தியிலும் ஆசாரவொழுக்கங்களில் குறையாத வாழ்வு வாழ்ந்து நமது ஐயர் 1916-ல் ஏப்ரல் மாதத்தில் தமது 63-ம் வயதில் இறைவன் அடி நிழலையடைந்தார்.

ஐயரின் அரிய மொழிகள்.

மனிதன் தனது செய்கைகளாலும் அறிவினாலும் மொழியினாலுமே மதிப்பிடப்படுகின்றான். அவற்றாலேயே அவனியில் அவன் அநவரதமும் ஆருயிர் பெற்றமர்கின்றான். நமது ஐயர் உடலை மண்ணுண்டு விட்டதெனினும் அவரது தீரமும், தேசபக்தியும் ததும்பிய செயல்களுக்கும் தீர்க்கதரிசனமும், அநுபவமும் அடர்ந்த மொழிகளுக்கும் எந்நாளும் இந்ததேச சரித்திரத்தில் இடமுண்டு. எனவே, தற்போதய ராஜீய சமுக நிலைமைகளை நன்கு மனத்தே கொண்டு அவரது மொழிகளைச் சற்று சீர்தூக்கிக் கவனிப்போம்.

ஐயரவர்கள் கவர்னர் மாளிகை விருந்துகளுக்கும் கூட்டங்களுக்கும் போனதில்லை. ஐரோப்பியர்களோடும் கூட நெருங்கி ஊடாடுவதில்லை. காரணங் கேட்கில் கூறுவார்: "நம்மை ஆளுபவர்கள் நாம் எந்த எந்த அம்சங்களில் பல ஹீனமாயிருக்கின்றோமோ அந்தந்த அம்சங்களில் அவர்கள் உறுதிபெற்றிருக்கின்றனர். அவர்களது தீவிரமான சுதேசபக்தியும், தமது பெருமையிலும், செயல்களிலும் அவர்களுக்குள்ள பெருமிதம், அவர்களது இணையற்ற தீரம், ஜாதிப்பெருமை இவையெலாம் நம் இந்தியருக்கு ஒருவகைப் பிரமையையும், மனத்தளர்ச்சியையும் உண்டுபண்ணிவிடும். நம்மிடையுள்ள பலஹீனங்களால் அவர்களுடைய பிரகாசத்தில் நாம் மங்கிவிடுகிறோம். நமது புராதனப்பெருமை, தேசம், எதிர்காலம் ஆகிய வெலாம் நம் கண் முன்னின்று மறைந்தொளித்துக் கொள்கின்றன." ஹா! இதைத் தான் அன்றோ மகாத்மா காந்தி அடிமைப் புத்தி என்று வருணிக்கின்றார்.

ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வரும் போதெலாம் நமது ஐயர் பெரும்பான்மையாய் ஹிந்துக்களைக் கொண்டு கோலோச்சும் முஸல்மானிய அரசன் ஹைதாரபாத் நிஜாமையும் முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக் கொண்டு செங்கோலோச்சும் இந்து மன்னன் காஷ்மீர அதிபனையும் பெருமிதத்துடன் குறிப்பிடுவதுண்டு. அங்ஙனமிருந்த ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இப்போது அடைந்து விட்ட கேடுதான் என்னே!

வந்தே மாதர இயக்க நாட்களில் எழுந்த பஹிஷ்கார முறையைப் பற்றி நமது ஐயர் வட ஆற்காடு ஜில்லா மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசியுள்ளது தற்போது கவனிக்கற்பாலது. "நமது பஹிஷ்கார இயக்கத்தின் பொருளும், நோக்கமும் சிலரால் தப்பர்த்தங் கொள்ளப்படுகின்றது. அது நமது சக்தியையும் காலதேசவர்த்தமானங்களையும் அநுசரித்து மேற் கொள்ளப்படும் ஒரு முறையேயன்றி 'சத்தியம் பேசு' என்பது போன்ற மதக்கொள்கை யல்ல. பஹிஷ்கார இயக்கத்தைக் கண்டிக்கிறவர்கள் நீங்கள் அன்னிய நாட்டுத் துணியை விலக்கினால் அன்னிய நாட்டு நூலையும் விலக்கவேண்டும்; வெளிநாட்டினின்று வருகிற சர்க்கரை, பாண்டங்கள், அன்னியர் போடும் ரயில் பாதைகள், செய்யும் மருந்துகள் முதலியவற்றையும் விலக்க வேண்டுமென்று வாதிக்கின்றனர். இவ்வாதம் முற்றிலும் பிசகு. நமது பஹிஷ்காரத்திற்கு ஒரு குறிப்பிட்ட லட்சியமுண்டு. அதை அடைய அது உற்றதாயிருக்கிறது. தேசாபிமானிகள் யாவரும் அதனை மேற் கொள்ளவேண்டும். நாம் இறக்குமதி செய்யும் ஒவ்வொரு சாமானுக்கும் நம்மிடம் பிரதி (Substitute) இல்லை, எனினும் சில வற்றிற்கென்னவோ பிரதி செய்ய முடிகிறது. அதைத் தேச மாதாவுக்கு நமது திருப்பணியாகச் செய்துமுடிப்போம்.நமது கிராமங்களில் உற்பத்தியான பொருள்கள் சற்று அதிக விலையாகவேயிருக்கலாம், அன்னியசரக்கைப்போல் பார்வையாகவும் சௌகரிய மாகவும் இல்லாமற் போகலாம், எனினும், பட்டினிகிடக்கின்ற கோடிக்கணக்கான சகோ

தரர்களுக்காக நாம் கந்தைகளையும் அணிவோமேயன்றி அன்னிய ஆடைகளில் நாகரீகர்களாக விளங்க மாட்டோம்.'' இதே பேச்சு இன்று பேசப்பட்டதே போலிருக்கின்றதன்றோ? நண்பர்களே! அதே பிரசங்கத்தில் கவர்ன்மென்டாரின் பார்வையில் கலாசாலைகள் நடைபெறக் கூடாதென்றும் ஜனங்கள் தேசிய கல்விஸ்தாபனங்களை நாடெங்கும் ஏற்படுத்தித் தேசீய முறையில் கல்வி போதிக்க வேண்டுமென்றும் பேசியிருக்கிறார்.

ஆசார சீர்திருத்த இயக்கத்தில் ஐயரவர்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அதுபற்றி அவர் கூறும் உரைகள் நம்மவர் ஆழ்ந்து சிந்திக்கற் பாலன. சீர்திருத்தங்களுக்சென்றே சீர்திருத்தங்கள் இயற்றவேண்டும் என்று கூறுபவர் அல்ல அவர். ஹிந்துக்கள் தற்கால நிலைமையை யொத்து முன்னைப் பார்க்கிலும் தீவிரமாய் முதன்மை பெற்றுவிளங்குவதற்கு இன்றியமையாதவை அச்சீர்திருத்தங்கள் என்கின்றார் நமது ஐயர். "ஒரு தேசத்தார் களங்கமற்ற குடும்ப வாழ்க்கையும், தீவிரமான தொழில் வியாபார ஊக்கமும், தேசீய ஒற்றுமையும், எழுச்சியும், தளராத தீரமும், தெளிந்த புத்தியும் பெற எவை எவை இடைஞ்சல்களாய் நிற்கின்றனவோ அவை யெல்லாம் முன்னதாகக் கைவிடப்படல் வேண்டும் அல்லது வேரறுக்கப்படல் வேண்டும். தேகவளம் பெறாத சிறுமிகளால் பெற்றெடுக்கப்பட்டு, கல்வியறிவிலாத அன்னோர்களால் வளர்க்கப்பட்ட ஒரு தேசமக்கள் மேற்சொன்ன இன்றியமையாத குணங்களை அடைதல் கூடாது. அன்றி, தமது ஸ்திரீகளைத் தமக்கு ஊழியஞ் செய்வதன்றி வேறு சிறந்த கடமையில்லாதவர்கள் போல் அடிமைப்படுத்தி வருபவர்களும், தீவினைவாய்ப்பட்ட தங்கள் விதவைகளை இரக்கஞ் சிறிதுமின்றிச் சிறை வைத்ததுபோல் வியர்த்த வாழ்வு வாழச் செய்பவர்களும் ஒரு சுதந்திர தேசமக்கள் ஆதல் கூடுமா? அன்றி, ஹிந்துக்களைப் போல ஆயிரக்கணக்கான ஜாதிப் பிரிவுகளாலும், மதபேதங்களாலும் குறுகிய திருஷ்டியையும் பொறாமையையும் பாலூட்டி வளர்த்துக் கொண்டிருப்பவர்தான் சுதந்தர மக்கள் ஆதல் கூடுமா? ஒருக்காலும் முடியாது'' ஐயரவர்கள் மேலும் சொல்வதைக் கவனிக்க.

"முன்பு இந்த ஜாதிப்பிரிவுகளால் ஜனங்களுக்கு ஏற்பட்ட சௌகரியங்களை நாம் அறிவோம். ஆயினும் இப்போது நிலைமைகள் மாறிவிட்டன. ஜாதி பேதங்களும் மாறிவிடவேண்டும். அதன் உருவம் மாறுதுபோயினும் அதன் உட்கருத்து மாறத்தான் வேண்டும். சமுகத்திற்கு அஸ்திவாரமாகக் காட்டப்படும் ஜாதி அமைப்புகள் செயற்கையாகவும், பலாத்காரமாகவும் பிறவியைக்கொண்டும் கட்டுப்படுத்தப்பட்ட அறிவு ஆசாரங்களைக்கொண்டும் உண்டு பண்ணப்பெற்றன வே யாதும். * * * * தற்கால உலகம் விசேஷ முறைகள் மூலமாய் ஜீவன் முக்தி யடைவதற்குக் கேட்கும் எந்த தனிப்பட்டவனுடைய உரிமைகளையும் ஒப்புக்கொள்ளமாட்டாது. பறையன் எனப்படுவோனாயினும் பிராமணன் எனப்படுவோனாயினும் அவனவன் சுதந்திரத்துடன் முக்தி யடையும் வழி தேடிக்

கொள்ள விடப்படுவான். பலவந்தமோ கொடுமையோ செய்யின் அதன் பயன் அப்பலவந்தத்திற்கோ கொடுமைக்கோ உட்பட்ட மனிதனே, வகுப்போ அதிக சுதந்திரம் வாய்ந்த வேறு மதங்களை அல்லது சமூகங்களைச் சேர்ந்து நிம்மதி யடைவதாக முடியுமே யன்றி வேறில்லை.

இந்த ஜாதி அமைப்பு கிராமக்குடிகள் தனித்தனி விலகி நின்று வாழ்ந்ததால் பெருத்த சிக்கலடைந்து ஜனங்களின் ஒற்றுமையுணர்ச்சியையும், ஆசாரங்களையும் ஓர் குறித்த எல்லைக்குள் ஒடுக்கிவிட்டது. எனவே, தேசீய உணர்ச்சி யென்பதே வளர இடமிலாது போயது. ரோம சாம்ராஜ்யம் சிதறுண்டதற்கு அதனை நிர்வகிப்போர்கள் திறமை யற்றவரென்பதும், அதன் ராணுவம் பலஹீன மானதென்பதும், அல்லது பொருளாதாரமும், யந்திர தந்திர சௌகரியங்களும் குறைவென்பதும் காரணமே யன்று. ஆனால் சமூகத்தில் தேசீய ஒற்றுணர்ச்சி என்பது உண்மையாய்க் காணக் கிடைக்காதது தான் காரணமாகும். எனவே, அத்தகைய தேசீய உணர்ச்சி நம்மிடை வளராத வரையில் நமது சமூகம் நசிக்கத் தொடங்கியுள்ளதென்பது நிச்சயம்."

குருகுல விவாதம் போன்ற சமீப நிகழ்ச்சிகளால் சநாதந தர்மத்தைப்பற்றியும், ஜாதி அமைப்புக்களைப் பற்றியும் மும்முரமான உணர்ச்சி யெழுந்துவரும் இந்நாளில் தாமே ஒரு சிறந்த பிராமணராகவும், வைதிகஹிந்துவாகவும் விளங்கிய நமது சுப்ரமணிய ஐயரவர்கள் அந்நாட்களிலேயே கூறியுள்ள மேற் காட்டிய அபிப்பிராயம் யாவரும் மதிக்கத்தக்கதா யிருக்கின்றது. இங்ஙனமே பல ராஜீய, சமூகப்பிரச்னைகளைப் பற்றி ஐயரவர்களின் ஆழ்ந்த கருத்துகளை எடுத்துக் காட்டிக் கொண்டு போக இங்கு இடமும் சௌகரியமும் இல்லையாதலின் இதனோடு நிறுத்திக் கொள்வோம். பின்னர் அவர் சரித்திரமும் மொழிகளும் தனியுருவில் சாங்கோபாங்கமாய் எழுத நேருமென்பதும், அது தமிழ் மக்களின் முதற் கடமை யென்பதும் மட்டில் நாம் குறிப்பிடுவோம்.

முடிவுரை

நம் தமிழ் மக்கள் தமது ஒப்புயர்வற்ற தேசத்தலைவருக்கு, தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் புதிய கம்பீரத்தையும் தேஜஸையும், அறிவையும், அருளிய மகானுக்கு இதுகாறும் தக்க நன்றி செய்தாரில்லை. ஒருகால் இந்திய சரித்திரம் மீண்டும் எழுதப்படும் போதும் தாய் நாடு சுதந்திரக் கொடி தாங்கி நிற்கும் போதும் தமிழ் மக்கள் பரிபூரணமான தன்னம்பிக்கையும், தேசீய எழுச்சியும் கொள்ளும் போதும் நமது ஐயரவர்களின் நற்பெயர் தேசீய நாமாவளியில் ஒன்றாய் எந்நாளும் விளங்குமாறு பொன்னாற் பொறிக்கப் படுவதன்றித் தமிழ் மக்களின் எதிர்காலப் பெருமைகளுக் கோர் கதிர் மணிச் சிகரம் போல் திகழுமென்பது முக்காலும் உண்மை.

கொடுங் காற்று.

நாற்புறமும் கடல் சூழ்ந்த தீவு ஒன்றுண்டு. இத்தீவின் கரையை இடைவிடாமல் அலைகள் மோதிக் கொண்டிருக்கின்றன. நீல நிறமுள்ள கடற்பரப்பில் தூய வெண்மையான நுரைகளோடு கூடிய அலைகள் பார்ப்பதற் கினிய காட்சியாகும். மலைப்பாறைகளும் குகைகளும் காடுகளும் சிற்றாறுகளும் பறவைகளும் விலங்குகளுந்தான் இத்தீவில் காணப்படும் இயற்கைப் பொருள்களாம். இயற்கை யமைப்பின் செவ்வி இத்தீவில் இனிது விளங்கிற்று. மனிதர் குடியேற்ற மற்ற இவ்விடத்தில், நரைமுது கிழவன் ஒருவனும் மங்கைப் பருவமுள்ள அவனுடைய ஒரே மகளும் அன்றி மக்கள் வகுப்பைச் சேர்ந்த வேறே மனிதர் இலர். இத்தன்னந்தனித் தீவில் தந்தையும் மகளும் தனியே வசித்து வருவது அதிசயந்தான். நரை திரையுடைய இக்கிழவன் பெயர் பராபரன் என்பது ; தன் மகளை அவன் 'மிராந்தை' என்னும் பெயரால் அழைப்பது வழக்கம். மங்கைப் பருவத்தின் மாணெழில் அவளிடம் விளங்கிற்று. இப்பெண் குழந்தைப் பருவத்திலேயே தன் தாதையுடன் இத்தனித் தீவிற்கு (எதிர்பாராதபடி) வந்து விட்டபடியால், வயது சென்ற தன் தாதையை யன்றி வேறே மனித உருவத்தை யவள் கண்டவளல்லள். இவர்கள் வசித்துவரும் இல்லம் மலைப்பாறையிலுள்ள ஒரு குகையாகும். கிழவன் பராபரன் அப்பெரிய குகையைப் பல அறைகளாகத் தடுத்து அவற்றில் ஒன்றைத் தனது "கலா நிலையம்" ஆக உபயோகப் படுத்திவந்தான். இக்கலாநிலயத்தில் தான் அவன் ஆவலோடு படித்துவந்த பல சுவடிகள் இருக்கின்றன. இச்சுவடிகள் யாவும் மந்திர நூல்களாகும். கிழவன் பராபரன் மந்திரவித்தையைக் கற்பதில் மிகுந்த விருப்பமுடையவன். அவன் கற்றிருந்த மந்திர வித்தை, மனிதர் வாசமற்ற தனித்தீவில் வாழ்ந்துவரும் அவனுக்கு மிகுந்த உதவியாகவே யிருந்தது.

சில ஆண்டுகளுக்கு முன் (மிராந்தை குழந்தையா யிருந்தபோது) எதிர்பாராதபடி இத்தீவில் வந்து சேர்ந்த பராபரன் எங்கும் ஒருவித அழுகைக் குரல் கேட்பதைக் கண்டு மிகுந்த அதிசய மடைந்தான். அங்குள்ள மரங்களில் மந்திரத்தினால் கட்டப்பட்ட பல பேய்கள் பெருங்குரலிட்டுப் பெரிதும் வருந்தி அழுதுகொண்டிருந்தன. மனிதர் கண்களுக்குப் புலப்படாத பேய்கள் மந்திரவாதியான பராபரன் கண்களுக்குப் புலப்பட்டன. பேய்கள் மரங்களில் கட்டுண்டிருப்பதைக் கண்டபோது, அவற்றைக் கட்டிச் சிறைப் படுத்திய மந்திரவாதி யாராயிருக்கக் கூடுமென்று யோசித்துப் பராபரன் அதிசயப்பட்டான். பின்னர், அவைகள் படும் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி தான் கற்றிருந்த மந்திரங்களின் உதவியால் அப்பேய்களையெல்லாம் கட்டிலிருந்து விடுதலை செய்தான். அது முதல், நற்குணம்வாய்ந்த இப்பேய்கள் தம்மை விடுவித்த தாதை பராபரனிடம் நன்றி பாராட்டி அவன் கட்டளைகளுக்குத் தாழ்மையோடு கீழ்ப்

படிந்து நடந்து வந்தன. எரியன் என்னும் பேய் மற்றப் பேய்களுக் கெல்லாம் தலைமையானதா யிருந்தது.

கிழவன் பராபரன் இத்தீவில் வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பு தான் இத்தீவி லிருந்த "சேகரை" என்னும் மந்திர வித் தைக்காரி இறந்து போனாள். நெஞ்சிரக்க மில்லாத இவள், இப் பேய்களை யெல்லாம் தன் மந்திர வன்மையால் வசப்படுத்திக் கொண்டு தான் கருதிய சில கொடுமையான காரியங்களைச் செய்து முடிக்கும்படி அவைகளை ஏவினாள். இந்த நல்ல பேய்கள் அவள் சொல்லிய தீச்செய்கைகளைச் செய்ய உடன் படாமல் மறுத்து விட்டன. இதனால், இவைகளின் மேல் பெருங் கோபங் கொண்ட சேகரை இப்பேய்களை யெல்லாம் மரங்களில் மந்திரத்தால் பிணித் துக் கட்டி விட்டாள். அது முதல் இப்பேய்கள் மரங்களில் சிறைப் பட்டுப் பரிபவப்பட்டுக் கூச்சலிட்டுப் புலம்பி கொண்டிருந்தன. சில நாட்களுக்குள், தொண்ணூறு வயதிற்கு மேற்பட்ட சேகரை என் னும் அம்மந்திரக் காரியும் இறந்து விட்டாள். இச்சமயத்தில் தான் கிழவன் பராபரன் அத்தீவில் வந்து சேர்ந்து மேற் சொல்லியபடி அப்பேய்களை விடுதலை செய்தான்.

பேய்களில் தலைமையாயுள்ள எரியன் மிகுந்த நற்குணமும் சுறு சுறுப்பும் நன்றியறிதலும் திறமையு முடையதாயிருந்தும் அதனிடம் ஒரு தீச்செய்கை மாத்திரம் காணப் பட்டது. இறந்தபோன மந் திரக் காரியின் மகன் காலிபனைக் குறும்பு செய்து அவன் படுந்துன் பத்தைக் கண்டு மனமகிழ்வதில் எரியன் பேய் மிகுந்த விருப்பங் கொண்டிருந்தது. ஏனென்றால், மனிதக் குரங்கின் உருவத்தை யொத்து மிகுந்த விகார உருவமுடைய காலிபன், பேய்களைக் கொடுமையாய் நடத்திய மாயக்காரியின் வயிற்றில் பிறந்த மகனா வன். ஆகையால், அவனைக் காணும்போ தெல்லாம் எரியன் பேய்க்கு மன வெரிச்சல் உண்டாவது வழக்கம்; மாயக்காரியின்மீது தனக் குள்ள வஞ்சத்தையும் பகையையும் எரியன் பேய் அவள் மகனான காலிபன் மீது காட்டிற்று.

அந்த மின்றி விகார உருவமுள்ள "காலிபன்" காடுகளில் மிருகங் களைப்போல் திரிந்து கொண்டிருந்தான். ஒருநாள் வெளியில் உலாவச் சென்ற கிழவன் பராபரன் தற்செயலாய் அவனைக் கண்டு தன குகை வீட்டிற்கு அழைத்து வந்தான். பின்பு, படிக்கவும் எழுதவும் பேச வும் கற்பித்து வந்தான். ஆனால், மிருகத் தன்மையுள்ள காலிபனோ கல்வி கற்றுக் கொள்ளவில்லை. சொற்களைச் சரியாய் உச்சரித்துப் பேசவுங் கூட அவனால் முடியவில்லை. ஆனபடியால், காட்டி லிருந்து விறகு வெட்டிக் கொண்டுவருவது அருவியிலிருந்து தண் ணீர் கொண்டுவருவது போன்ற வேலைகளைக் காலிபன் செய்ய வேண் டிய தாயிற்று. காலிபன் சோம்பி யிருந்தாலும் வேலை செய்யாமல் அசட்டையா யிருந்தாலும் (கிழவன் பராபரன் கண்களுக் கன்றி ஏனையோர் கண்ணுக்குப்புலப்படாத)எரியன் பேய் மெல்லச் சென்று

அவனைக் கிள்ளி விடும்; அல்லது சேற்றில் தள்ளிவிடும்; அல்லது ஒரு மனிதக்குரங்கின் உருவங் கொண்டு காலிபன் எதிரில் நின்று முகத்தைச்சுளித்தும் பல்லையிளித்தும் பரிகாசம் செய்யும். மற்றும், முள்ளம் பன்றியின் உருவங்கொண்டு காலிபன் நடந்து போகும் போது அவன் காலில் வீழ்ந்து புரண்டு ஊசிபோன்ற முட்களால் குத்தி அவனுக்கு வேதனை யுண்டாக்கும். இவ்விதம் கணக்கற்ற கொடிய குறும்புகளைச் செய்து இறந்து போன மாயக்காரி மேலுள்ள தன் பகையை யெல்லாம் எரியன் பேய் காலிபன் மேல் காட்டி வஞ்சந்தீர்த்துக் கொண்டது.

பேய்களை நன்றிமறவா ஊழியர்களாகக் கொண்ட கிழவன் பராபரன், அவைகளின் உதவியால் காற்றையுங்கடலையுங்கூட ஏவல் செய்விக்கக் கூடிய வல்லமையுடையவனு யிருந்தான். அவன் கட்டளைப்படி ஒருநாள் இப்பேய்கள் கடலில் பயங்கரமான புயல்காற்றை யுண்டாக்கிவிட்டன. கட்டுக் கடங்காத கொடுங்காற்று பயங்கர ஓசையுடன் கடலில் வீசிற்று. கடல் கொந்தளித்தது. மூர்க்கமான பெரிய அலைகள் மலைபோல் எழுந்து புரண்டன. கடல் இறைவதனுலுண்டான ஓசை அச்சத்தை யுண்டாக்கிற்று. இந்நிலையில், புயற்காற்றுடன் சேர்ந்து கொந்தளிக்கும் அலைகளினிடையே ஒரு கப்பல் அகப்பட்டு அப்புறமும் இப்புறமும் அலைப்புண்டு ஒரு விஞடியில் முழுகிப்போய்விடுந்தருவாயி லிருக்கிறது. பலமாய் வீசும் புயல் காற்று கப்பலைக் கவிழ்த்துவிடுமுன்பே மேலெழும்பும் பெரிய அலைகள் அக்கப்பலைக்கடலில் அமிழ்த்திவிடும்போலிருக்கிறது! ஐயோ, அக்கப்பலிலுள்ள பிரயாணிகள் என்ன பாடு படுவார்கள்! காற்றுங் கடலும் இருக்கிற நிலைமையை நோக்க நிச்சயமாய் அவர்கள் கடலில் முழுகி இறந்துபோவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒருவனுவது உயிருடன் தப்பிப்பிழைத்துக்கரைவந்து சேர்வதற்கு வழியில்லை. இனி அவர்கள் விதி யாதோ.

இச்சமயத்தில் தன் மகள் மிராந்தையுடன் கடற்கரைக்கு வந்த பராபரன் ஆபத்திலிருக்கும் அக்கப்பலை அச்சிறுமிக்குச் சுட்டிக்காட்டி "அந்தப் பெரியகப்பலில் நம்மைப்போன்ற மனிதர்கள் இருக்கிறுர்கள்" என்று சொன்னுன்.

தன்னைப்போன்ற மனிதர் பிரயாணம் செய்யும் கப்பல் ஒன்று கடலில் கவிழ்ந்து முழுகிவிடக்கூடிய ஆபத்திலிருப்பதைக் கண்ட போது மிராந்தைக்கு மனந்துடித்தது.

"ஐயோ! பாவம்! அவர்கள் எல்லோரும் கடலில் முழுகி இறந்து விடுவார்கள்போலிருக்கிறது! ஓ அப்பா! உம்முடைய வித்தையினுல் இப்புயல் காற்றை நீர் உண்டாக்கியிருந்தால் அந்த மனிதர் மேல் இரக்கம் வையுங்கள். காற்றையடக்கும் ஆற்றல் எனக்கிருக்குமானுல் இப்பொழுதே இக்கொடிய புயல்காற்றை யடக்கி மூர்க்கத்

தோடு இறைகிற இக்கடலை அமைதியாயிருக்கச்செய்வேன்'' என்று மிராந்தை மிகுந்த பரிதாபப்பட்டு சொன்னாள்.

"குழந்தாய், மிராந்தா! கவலைப்படாதே. நீ நினைக்கிறபடி புயற்காற்றை வீசச்செய்தவன் நான் தான்; அதுவும் உன் நன்மையைக் கருதியே, கப்பலில் உள்ளவர்களுக்கு இம்மியும் தீங்கு நேரிடக் கூடாதென்று நான் உத்தரவிட்டிருக்கிறேன். ஆகையால், கடல் பிரயாணிகளைப் பற்றிக் கவலை கொள்ளாதே. நல்லது, குழந்தாய்! நீ யாரென்றும் எங்கிருந்து இத்தீவிற்கு வந்தாயென்றும் உனக்குத் தெரியாது; நான் உன் தந்தை என்பதைத்தவிர வேறு ஒன்றும் உனக்குத் தெரியாது. நீ மூன்று வயது குழந்தையாயிருந்த காலத்தில் நடந்தவைகளைப்பற்றி நீ யொன்றும் அறியமாட்டாய் என்றே நினைக்கிறேன். குழந்தாய்! மிராந்தா! உனக்கேதேனும் நினைவிருக்கிறதா? இருந்தால் சொல், பார்க்கலாம். என்று வினவினான் கிழவன்.

"ஆம் அப்பா! நினைவிருக்கிறது. கனவு போலத் தோன்றுகிறது"

"ஆ! என்ன? நினைவிருக்கிறதா? அதென்ன; சொல் பார்க்கலாம்!" என்று அதிசயத்தோடு வினவினான் கிழவன்.

"ஏன் அப்பா! நான் குழந்தையா யிருந்தபோது என்னை நான்கு தாதிகள் வளர்த்து வந்தார்கள் அல்லவா?" என்று வினவும் விடையுமாகச் சொன்னாள் மிராந்தை.

"ஆமாம், அம்மா! நான்கு தாதிகள் மாத்திரம் அல்ல. அநேகந் தாதிகள் இருந்தார்கள். ஆனாலும் இது உனக்குக் கவனமிருப்பது அதிசயந்தான். இன்னும் ஏதேனும் ஞாபக மிருக்கிறதா?"

"இல்லை அப்பா! வேறொன்றும் எனக்குக் கவனமில்லை" என்றாள் மிராந்தை.

(மயிலை. சீனி வேங்கிடசாமி.

தொடரும்.

ஒண்டாரியோவிலுள்ள போர்ட் ஆர்தருக்கு வடகிழக்கே 180 மைல் தூரத்தில் உள்ள ஒரு ஜில்லாவில் புதிதாக தங்கச் சுரங்கங்கள் அகப்பட்டிருக்கின்றன என்று 'டைம்ஸ்' பத்திரிகையின் டோரண்டோ நிருபர் தெரிவிக்கிறார்.

***

லங்காஷைர் வர்த்தகசாலையாரிடம் மூன்று லட்சம் பவுன் பெறுமானமுள்ள நூல்களுக்கும் ஆடைகளுக்கும் ருஷிய அரசாங்கத்தார் ஆர்டர் கொடுத்திருப்பதாக மான்செஸ்டரிலிருந்து "டெய்லி எக்ஸ்பிரஸு"க்கு செய்தி எட்டியிருக்கிறது.

அனுமன் தூதனா?

(ஸ்ரீமான் S. S. பாரதி M,A., B.L., அவர்கள் எழுதியது.)

(1) பொதுவாக அனுமனைத் தூதன் என வழங்கக் கேட்கின்றோம். இவ்வழக்கு நூலாதார முடைத்தா? நுண்மாண் நுழைபுலனுடையார் விதித்துள தூதிலக்கண வகையா னாராயின், அனுமனைத் தூதனாக் கருதற் கிடனுண்டா? இந்த ஆராய்ச்சிக்குத் தூதிலக்கணமும், தூதனதியல்பு முற்படத் தெளிதலவசியம்.

(2) தமிழிற் புறப்பொருணூலார், தூதரை, ஓரரசன் வேற்று வேந்தரிடை வினைமுடிக்க விடுக்கு மமைச்சராக் கொள்கின்றனர். அறிவு உருவு ஆராய்ந்த கல்வியுடையராய்க் கண்ணஞ்சாது வேற்று வேந்தரிடைத்தாஞ் சொலவந்த செலச் சொல்லி, மேற் கொண்ட வினை முடிக்கத்தக்க தறியுந் தூதர், தாம் வகுத்துக் கூறுவார், கூறியது கூறுவார் என்றிருதிறப் படுவார், என்ப தமிணூலுடையார். இவ்விரு வகையாருடன் தம்மரசராற் றரப்பெற்ற ஓலையைப் பிறமன்னரிடங் கொடுத்து விடை கொள்வாரையுங் கூட்டித் தூதரைத்தலை, இடை, கடை யென முத்திறம்பட வடநூலார் வகுத்துக் கூறுவதாகப் பரிமேலழகர் குறளுரையா னறிவாம். இருநூலார் கூற்றானுங் கொள்ளக் கிடைப்பது, தூதன், வேந்த னொருவனால் இறையியல் வினைமேல் வேற்று வேந்தரிடை உய்க்கப்படுந் தகவுடை யமைச்சனாதலேயாம். கோறன்மாலைய ரான வேலுடை வேற்று வேந்தரிடைத் தம்மன்னர் “ ” விடுமாற்ற முரைத்தற் குரியராய் “தூதர்,” உருக்கரந்து, எல்லார் கண்ணும் “நிகழ்பவை,” “மறைந்தவை,” எல்லாமறிந்து வந்து மன்னர்க் கறிவிப்பாராய ஒற்றரின் வேறு பட்டவராவர். ஒற்றப் பட்ட பிறர் தந்தொழிலையுற்றுத் தம்மைப் பற்றியெல்லாத் துன்பமுஞ் செய்து கேட்பினுந் தன்னையும் தம்மனத்துக் கொண்டவற்றையுஞ் சோர்ந்து வெளிப்படுத்தா நல்லொற்றர் மன்னவர்க் கின்றியமையாதவரே யாயினும், ஒற்றர் தூதுவராகார். இவ்விருதிற இறையியல் வினையாளருந் தொழிற்றுறை, பதவி, தகவு, உரிமை முறைகளான் வேறு பட்டவ ரென்பதை மறவாது கவனிக்க வேண்டும்.

(3) தூதரும், ஒற்றரும், வேந்தரால் இறையியல் வினைவயினுய்க்கப் படுமுறையின் மட்டே தம்முள்ளொப்பார். பிறிதெல்லா வகையானு மொவ்வார். தூதர், எஞ்ஞான்றும் வேற்று வேந்தரிடை “விடுமாற்ற முரைத்தற்கே” யுரியார்: ஒற்றரோ, வேந்தர்பால் மட்டே யன்றித் தம்மை யேவு மன்னர் தம்வினை செய்வார், சுற்றத்தார், பகைவர், என்றாங் கனை வரையு மவரறியா தெய்தியவர் செயல் கருத்துக்களனைத்தையு மாராய்ந்து வந்து தம்மன்னர்க்குத் தெரிவிக்குந் தொழிலுடையார். தூதர் தறுகண்ணராய பகைமன்னரிடத்தும் தம்மைக் கரவாது சென்று தம்மன்னர் விடுமாற்ற முரை

த்து அறத்துறையான் வினையாற்றற் பாலார்: ஒற்றர் யாண்டும் யாரிடத்துந் தம் முருக் கரந்து சென்று, முறைவரம்பி கந்து, மறை களையுங் கவர்ந்து வரற்குரியார். ஆராய்ந்த கல்வி, சொல் வன்மை, அன்பு முதலிய நற்குண நிறைந்த தூதர், அமைச்சராக் கருதற் குரியார்: "கடா அ வுருவொடு கண்ணஞ்சாதி யாண்டு முகாமை வல்ல"ஒற்றர், மன்னவை மதிப்பிற் குரியரல்லா வேவு காரர், அல்லது உளவரே யாவர். இறையியல் வினையை அறத்துறை யாற்றுஞ் சால் புடைத் தூதர், பகைமன்னரானு மூறு செய்யாது போற்றற் குரியார்: ஒற்றரோ, பிடிக்கப்படின், ஒற்றப் பெற்ருரா லொருக்கப் படுந் தகவுடையார்.

(4) இதுகாறும் தூதிலக்கணமும் தூதர் தொழிற்றுறையுந்தகவு மொருவா றினைத் தென வறிந்தோம். இம்முறை கொண்டு, அனுமன் துறையும் வினைசெயல் முறையுந் தூக்கி, அவன் தூதியல் பதவியுரிமை யளப்பாம். சுக்கிரீவனுல் ஜானகி யிருக்கு மிடந்தேடி யறிந்துவர வனுப்பப் பட்ட பலருள், அனும ஞெருவன். தென்திசை துருவி வர நியமிக்கப் பெற்ற கூட்டத்தவருக்குத் தலைவன் அங்கதன் என்பதறி வோம். அங்கதனுக்குத் துணையா யனுப்பப் பட்டவருள், அனுமன் அறிவாற்றல்களாற் சிறந்தவனுகும். சீதையைத் தேடிவரச் செல்லுங் கால், "பெரும் பொறையறிவினுற்" சிறப்புடைய வனுமனை யவன் பண்புமுண்மைப் பணிவிருப்புந் தன்பாலன் புடைமையு மறிந்ததாசரதி தனியழைத்து தென் திசையி லொருகால் சீதையைக் காண நேரின், அவளிடஞ் சேர்ப்பிக்க அடையாள மோதிரமுங் குறியீடாம் வடித்த செஞ் சொற்களுந் தந்து விட்டான். சீதையின் உருவ வடையாளம் அனுமனுக்கு மட்டுமே சொல்லப் பட்டாதாக் கொள்வது முறையன் ருகும். பிறிது திசை செல்வார் பலருக்குஞ் சொல்லப் பட்டதாகவே வேண்டும். அன்றே லவர்களையுஞ் சீதையைத் தேடிவருமாறனுப் புவதில் பண்பும் பயனுமின்ருய் முடியும். திசை தொறு மோடி யிடமெலாந் தேடிவரச் சென்ருர் பலர்க்கும் இராமன் மறையின்றித் தன் மனத்துள வுரைப்பது எதிர்பார்க்கத் தக்கதன்றே? இலங்கை வேந்தனே தன் தேவியை எடுத்துச் சென்றதா யறிந்த தாசரதி தென்னி லங்கையி லவளைக் காணுதலாகுமென் றூகிப்பானுகையா லும், தென்திசையேகுவோரி லனுமான் நம்புதற்குரியனுகையாலும், பிறர் பலரையுஞ் சீதையைத் தேடி யிருக்குமிடந் தெரிந்து வரும்படி பொதுவிற்றூண்டி, அனுமனிடஞ் சில விதந்து கூறப் பட்டதாய்க் கொள்ளற் கிடமாகும். பலரிடமும் பலமுறை யவ ளங்கவடையாளங் கூறுதல் மிகையாதல் பற்றி, விதந்தோது மனுமனிடங் கூறுமுகத் தானதைப் பொதுமையிற் கூறியமைக்கப் பட்டுளது. தெற்கே சென்றவருள், அங்கதன் ஆணையுந் துணைவர் தூண்டலுங் கொண் டனும னிலங்கை புகுந்து, உருக்கரந்து, யாண்டுந் துருவி, சீதையை யசோகவனத்தேகண்டுஇராவணன் வினைவலாரறியாவண்ணமவளுட னுரையாடித் தான் சென்ற கருமமுடித்தும் திரும்பாமற் பின்னுந்தன் மன்னனுய சுக்கிரீவனுலும், தென்திசை வந்த கூட்டத் தலைவனுய

அனுமன் தூதனா ?

அங்கதனாலும்,இராமனாலும் பணிக்கப் படாத பல முறை யிகந்த செய
லாற்றி,இராவணன் படையையுமுற்ற சுற்றத்தார் பலரையு மெழிலா
ரும் பொழிலையு மழித் திறுதியிற் பிணியுண்டு, தசக்கிரீவன் முன்
னாய்க்கப் பட்டபோ தவனையும் பழித்தான். இவை கொண்டு
வெகுண்ட வேந்தனி வனைக் கொல்ல நினைத்தான் : எனினு மமைச்ச
ராற்றத் தணிந் திறுதியி லனுமனைப் பொறுத் துயிருடன் விடுக்கத்
துணிந்தான். அவ னாணைப்படி ஏவல ரிவன் வாலி லழல் கொளுவி
விட்டார் : அனும னரச னணி நகரை யெரியூட்டி, ஆயிரவர் வெந்
திறக்கப் பல்லாயிர வாழல் னொந்துழல, பேரூரும் பெருநிதியும்
கெட்டழியச் செய்து மீண்டான்.

(5) அனுமனை யிலங்கைக்குத் தனி யேவியவன் அங்கதன் ;
அவன் அரசனானன். அங்கத னாணையின் கீழ்த் தென்றிசை துருவிச்
சீதையிருப்பிட மறிந்து வருமாறு பலருட னனுமனையும் பணித்த
னுப்பிய சுக்கிரீவன் கிட்கிந்தைக் கிறைவனாவான். ஆகவே யனும
னோர் வேந்தனால் விடுக்கப்பட்டவ னாகலாம். ஆயினவனை வேற்று
வேந்தரிடையாதும் விளம்பிவரக்கிட்கிந்தை மன்னன் பணித்ததில்லை.
பரதன் விரும்பித் தந்த வரசு பெற்றதனா லரசனாவானாயினும், இரா
மன் அனுமனை யனுப்பினவனில்லை. சூரக்கரசனா லனுப்பப்பட்ட
போது போகு மனுமனிட மிராமன் சீதையைக் காண நேரிலின்னது
செய்திடுக வெனச் சொல்லிய தன்றி, தன்னேவலனுப்பத் தான்
தனியுய்த்தில னிராமன். அன்றியுமிராம னனுமனைப் பிறவேந்தன்
பால் யாதும் தூது சொல்ல வுய்க்கவுமில்லை. எனவே வேந்த னொரு
வன் வேவுகாரனாய், சீதை யிருப்பிட மறிந்துவரும் பணிமேற்
கொண்ட அனுமனைத் "தூதன்" என்ப தெப்படியாகும்? மேற்
கொண்டு சென்ற தொழிலுந் தூதன் தொழிலன்றே? கரவாது,
அறத்தாறழுங்காது, வேற்று வேந்தனிடம் தன் மன்னன் "விடுமாற்
றம்" செலச் சொல்லி மீள்வதன்றோ தூதன் துறை? உருக்கரந்து
சென்று, அரசனு மவன் வினைவலரு மறியா வண்ணந் தன் னெண்ண
முடிப்பவன் ஒற்றனேயாக வேண்டும். இராவணன் தன் அசோக
வனத்தை யாவரும் புகுந்து திரியக் காட்சிப் பொழிலாக்க வில்லையே.
அனுமன் தன்னுருக் கரந்துலவிய தொன்றே இலங்கையிலிவனுக்குத்
தூதுத் தொழிலின் றென்பதை விளக்குவ தாகும். அறிவு மாராய்ந்த
கல்வியும் சொல்வன்மையு முடையனேனும், பிடிபட்ட வனுமன்
வேத்தவையிற் றூதுரைப்பானா யாதுந் "தூவாத நீக்கித் தொகச்
சொல்ல"வில்லை ; வேந்தனாய இராவணன் தூதனாவான் செயத்
தகுங் "கடனறிந்து, காலங்கருதி, இடனறிந் தெண்ணி"த் தூது
மாற்ற மொன்று முரைத்தானுமில்லை ; வாய் சோர்ந் திலங்கை மன்
னனை வருமாற்றமுங் கூறிப் பழித்துத் தூதரிமை யழித்தான்.
அனும னிவைபல வாற்றானுந் தூதனாகான் : ஒற்றனேயாத லொரு
தலை யன்றோ?

(6) தூதர், விடுமாற்றம் வேற்று வேந்தரிடை யாராய்ந்த வின்
சொற்களா லவர் மனங் கொளச் சொல்லித் தூவாத வெய்ய சொற்

களை நீக்கி நன்றி பயப்பதை விட்டு, தாங்கரந்துதருவிப் பிறவரசர்
மறையறிவ தோடமையாது, தம்மன்னரும் பணியா வழி யவரூரையும்
படையையு மழிப்பது முறையாமா? முறையிறந்த தூதரும், தூத
ருரிமை யிழந்து, குற்றத்துக்குத் தக்கவா றவமதிக்கப் படுவர். ஒற்
றரோ, ஊறொன்றுஞ் செய்யா விடத்தும், மறையறிய வந்தவினை
பற்றிப் பிடிக்கப்படின் பிடித்த மன்னரா லொறுக்கப்பட வேண்
டிய வராவர். ஆன்ற குடிப்பிறப்பாதி நற்குணங்களாலமைச்சரோ
டெண்ணப்படுந் தூதர் போலாது, ஒற்றப்படும் பிற ரவமதிப்புக்கு
மொறுப்புக்கு முள்ளாவதோடு, ஒற்றர் தம்மன்னரானு மூற்று மதிக்
கப் படார். மும்முறை மூவேறு ஒற்றர் கூற்றொத்தாலன்றியவர்
நம்புந்தகையுடையாரன் றென்பது தமிழ் மறை. இஃ திவ ரிழி
தொழில் பற்றி, அத்தொழில் மேற் கொள்வார் மேலேற்றப்பட்ட
தகவுரையே யாகும். ஊறொன்று மியற்று வொற்றரே பிடிபடின்
பிடித்தவரா லொறுக்கப் படுதல் முறையாமேல், தான் வந்த வினை
யான சீதை யிருப்பிடமறியு மொற்றன் செய லோடமையாது,
இலங்கை மன்னனுக்குப் பல்வாறு ஊறுஞ் செய்து போந்த அனு
மனை யவன் பிடித்த பிறகும் தன்னெதிரி வடுமாற்றங்கூறிப் பழித்
தவனுயிர் வௌவாம லவனுக்கு வடுவிழைக்கப் பணித்தது பழி
யாமோ? இராமனைத் தெய்வமாகவே கொள்ளினும், அனுமன்
தூதுரிமை பெறுமா றில்லையே. இராவணன் கொடியனேயாயினு
மனுமனையவன் போற்ற நியாயமுமில்லையே. ஒற்றவந்தானை ஒற்றப்
பட்டானொருப்பது இறைமையறமே யாகுமன்றோ?

(7) இனி யுளவு செனு மொற்றரையே தூதரென்போ மென்
றால், சொல்பற்றி வாதமில்லை. ஒற்றரைத் தூதரென்றழைப்பா
ரழைப்பதைத் தடுக்க வல்லாரில்லை. எனின், தூதருரிமைகளை ஒற்
றுத் தொழிலாளருக் குதவுவ தியலாது: எப்பெயர் புனைந்தாரே
னும், ஆற்றுந் தொழில் கொண்டே வினையாளர் தகவுமுரிமையுமதிக்
கப்படும். ஒற்றுத் தொழிலுடையாரைத் தூதரென்று வேண்டியா
ரழைப்பினும், அத்தொழிலன்றிப் பிறிது பல நிறைகுணமவ்வொற்ற
ருடையரேனும், அத்தொழிலுடையவ ரகப்படி னவரை ஒற்றரா
வைத்து முறை செய்வது ஒற்றப்படுவார்க் குரியதாகு மென்பதே
ஈண்டைப் பொருள் படுவதாகும்.

டெக்காவைச்சேர்ந்த பிர ரஞ்சன தே என்னும் வாலிபன் இர
ண்டாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ரங்கோன் நகரத்திற்கு ஐந்து
மாதம் நான்கு நாட்களில் கால் கடையாக வந்து சேர்ந்தான். இவ்
வாறு நம் சிறுவர் துணிவுகொள்ள வேண்டுமென்று எடுத்துக்காட்
டவே தான் அவ்வாறு வந்தானாம். வழியில் மணற்பாங்கான இடங்
களிலுள்ள ஊர்ந்து நகரும் இனத்தைச்சேர்ந்த புழுக்களால் (அட்
டை முதலியவற்றால்) சிறிது கஷ்ட முண்டாகியதேயன்றி காட்டு
வழியில் எவ்வித கஷ்டமும் ஏற்பட வில்லையாம். வழியிலுள்ள
கிராமஜனங்கள் சிறப்பாக உபசரித்தனராம்.

தாய்த் தொண்டு

(த. ராமகிருஷ்ணன்.)

க. இளா ஸரஸ்வதி மஹி
திஸ்ரோ தேவிர் மயொபுவ :
ஹ்பர்ஹி : ஸீதந்த்வ ஸ்ரித :
இருக்கு I. xiv. 9.

உ. திஸ்ரோ தேவிர் ஹ்பர்ஹிரேதம்
ஸதந்த் விடா ஸரஸ்வதி பாரதி
மஹி ஹ்க்ருணா.
எசுர் xxvii. 19.

ங. திஸ்ரோ தேவிர் ஹ்பர்ஹிரேதம்
ஸதந்தா மிடா ஸரஸ்வதி
மஹி பாரதி ஹ்க்ருணா.
அதர்வம் V. xxvii. 9.

இளா-இடா (மொழி), சரஸ்வதி (கலை), மஹி பாரதி (பிறந்த நாடு) ஆகிய முத்தேவியர்களும், மூன்று உயர்திருச் சத்திகளும் உள்ளக் கிளர்ச்சி யளிப்பவர்கள். இம்மூவர்களையும் மறவாது மனத்தின் கண் நிறுவிடுக.

பாரதி மஹி-தாய்நாடு (Mother-land), ஸரஸ்வதி-தாய் நாட்டுக் கலைகள் (Mother-culture) இடா-தாய்மொழி (Mother-tongue) யாகிய மூன்று சிறந்த பொருட்களையும் யாவரும் எஞ்ஞான்றும் தங்கள் உள்ளங்களில் பதித்து இடையறாது சிந்தித்துப் பேரன்புடனும் ஆர்வத்துடனும் வழிபட வேண்டுவது இன்றியமையாக் கடமையாகும்.

இம்மூன்று மந்திரங்களும் இருக்கு, எசுர், அதர்வமென்னும் மும்மறைகளிலும் சிறிது பாட பேதத்துடன் காணப்படுகின்றன. இவற்றின் கருத்தொன்றே. இவை யாவருள்ளத்தும் பதிக்கத்தக்கவை. தாய்மொழி, தாய்நாட்டுக் கலைகள், தாய்நாடாகிய முப்பொருள்கள்மீது யாவரும் உள்ளங்கொள்ளல் வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றன. எத்தேயத்திற்கும் காலத்திற்கும் ஒத்ததாகிய இம் மந்திரங்களின் பொதுத்தன்மையைச் சிந்திததிடுக. புராணகாலத்து சரஸ்வதி, இடா, மஹிபாரதி யென்ற மூவகைச் சிறந்த ஆற்றல்களை யாவருள்ளத்து மெழுப்புதல் வேண்டுமென்ற பெரு நோக்கத்துடன்; உயிர்களின் பொருட்டு உலகினையாக்கிக் காத்து அழித்தற் குறுதுணையாக முத்தொழிற் றலைவர்களும் சரஸ்வதி, இலக்குமி, பார்வதி யென்ற மூன்று சக்திகளை நாவிலும், மார்பகத்தும், உடம்பி னொரு பகுதியிலுங் கொண்டனரென்று உருவகப்படுத்தினர். மூவர் முதல் வணகிய பரம்பொருளிடத்து இச்சக்திகள் அவனது செயலாகவும், உள்ளமாகவும், அறிவாகவும் மிளிர்கின்றன. பொருட்களிடத்து குணங்கள் இயற்கையாக அமைந்திருப்பது போன்று, இச்சக்திகள்

இறைவனது குணங்களாக விளங்குகின்றன. இவ்வாற்றல்களால் இறைவன் உலகினை இயக்குமாறு; மக்கள் வாழ்க்கை நுகர்ந்து இன்ப மெய்தி விடுதலையடைதற்கு இச்சக்திகளைத் தம்மகத்தே கொள்ளல்வேண்டும்.

யாக்கையில் நெஞ்சகத்தைத் தானமாகக் கொண்டெழு மொலிக்கூட்டத்தினடியாகப் பிறக்குமொழி தாய் மொழியாகவும்; மார்பகத்துந் தலையிலும் நிலைத்துள்ள மனத்தின் சிந்தனையால் பொங்கியெழுங்கலைகள், நாவினடியாகத் தாய் மொழியின் துணைகொண்டு வெளிப்போந்து யாவர்க்கும் பயன்றரும் தாய்க்கலைகளாகவும்; அடிதொட்டு முடியளவு உடம்பினொரு பகுதியி லிடம் பெற்று ஒருயிராகவும், உதிரம் பாய்ந்து கலந்து ஒருடலாகவும் இணைந்திருக்கின்ற அவ்யாக்கையே தாய் நாடாகவும் அமைகின்றன. தம்முடலையே தாய்க்குரிமையாக்கி, மனத்தால் கலைகளைத் தோற்றுவித்து, வாக்கினால் வளர்த்து யாவர்க்கும் வழங்கிடுக. நாட்டின் உயர்ச்சிக்கு நாட்டினிடத்துப் பேரன்பு செலுத்தலும், நாட்டுக் கலைகளைப் பாது காத்தலும், நாட்டின் மொழியை வளர்த்தலும் இன்றியமையாத கடமைகளாகும்.

நாட்டின் செல்வங்களை இலக்குமியாக மதிக்கின்றோம். நாட்டின் கலைகளை சரஸ்வதியாகப் போற்றுகின்றோம். நாட்டைத் தாயாகக் கருதி நம்மைக் காத்தற் பொருட்டு துர்க்கை யென்றுங் காளியென்றும் பிற பெயரிட்டும் நாட்டின் காவற்றெய்வமாக அமைத்து உயிர்ப் பலி முதலியன வழங்கி வழிபடுகின்றோம். இவை யனைத்தும் நமது தெய்வப் பற்றைப் புலப்படுத்துகின்றன. நம்மைக் காக்க-நாட்டைக் காக்க வமைத்த காவற்றெய்வத்திற்கு வழிபாடாக; நமக்கோ நாட்டிற்கோ உறுகண் வந்தவிடத்து உயிரையும் வழங்கிக் காக்கக் கடமைப்பட்ட நாம் வாயிலாப் பிராணிகளாகிய ஆடு கோழிகளையும் பிறவற்றையும் பலி கொடுத்த லென்னே அறியாமை! நம்மையும் பிற உயிர்களையும் ஈன்று காக்கும் அன்னைக்கு இது உவப்பாகுமோ? கருணையே வடிவாகிய தாய்க்கு இது மகிழ்வளிக்குமோ? சிந்தியுங்கள். தாய் தனது மொழியை இழந்து, கலைகளை யிழந்து, சீரிழந்து, செல்வமிழந்து, முடியிழந்து, உரிமை யிழந்து பிறர் வாய்ப் பட்டு அல்லலுறுங்கால்; பெற்ற மக்களாகிய நாம் பொருளை மதியாது, உடலை மதியாது, உயிரையும் மதியாது யாவற்றையுந் துறந்து தாயைச் சுதந்திர தேவியாக்கப் பாடுபடுத லன்றோ தாய்த்தொண்டு, தாய்க்கு வழிபாடு.

இவ்வரிய மொழிகளை உயிரிலும் உள்ளத்தும் உரையிலும் நிறுவுதற் பொருட்டே முவ்வேதங்களிலும் உணர்த்தப் பட்டன. இருக்கு அல்லது மொழி வாக்குத் தானத்தும், எசுர் அல்லது செயல் மனத்தின் கண்ணும், அதர்வம் அல்லது ஆன்மசக்தி யாக்கை முழுதும் நிலவுகின்றன. தாய்ப் பற்று ஆன்மாவினிடத்து இடையறாது (அ-தர்வமாக) நிலைபெற்றுக் கலைகளை வளர்த்து மொழியால் பரப்பித் தாய்நாட்டு மக்கட்குதவிச் சகோதரப் பான்மை யாண்டும் பொலிந்

தமிழ்நாடு ஆவண
2(E)352
600 008

திட நாட்டை உயர்த்தல் வேண்டும். நாட்டிற்கும் கலைகளுக்கும் மொழிக்கும் எவ்விதக் குறை பாடுகள் நிகழினும், அவற்றைச் சீர்திருத்தி விடுதலை நாடி உயிர் கொடுத்தேனுங் காத்தல் தாய்த்தொண்டாகும்.

நாட்டின் வளங்கண்டு இயற்கை நலந்துய்த்து இறைவனடி படிந்து இன்பவெள்ளம் பருகு முள்ளத்தால் தோன்றுவன கலைகள். மக்களுள்ளத்தினின் றெழுந்து பிரவகித்து யாண்டும் பரந்து செல்வதால் இக்கலைகளை ஸரஸ்வதி யென்று கூறுவா ராயினர். இக்கலைகள் உயர்ந்தாரைப் போற்றி, ஒத்தாரோ டுட னியங்கி, இழிந்தார்க் குதவி அறநலம் வளர்த்து சமநிலை காத்திடற் குறுதுணை யாகின்றன. மக்கள் வாழ்க்கைக்குக் கலையுணர்வு இன்றியமையாதது. உலகமே கலைமயம், உலகசிருஷ்டியே தொழில் மயம், நாட்டின் நாகரீகமும் செல்வமும் வளர்ந்திட நாட்டுக்கலைகளும் கைத்தொழில்களும் மலிந் திடல் வேண்டும். நாட்டின் கலைகளையுந் தொழில்களையும் பெருக்கு தலும் தாழ்வு நேரின் எவ்வகையானும் முனைந்து நின்று காத்தலுந் தாய்த்தொண் டாகும். நாட்டுப் பற்றும், கலைப்பற்றும், மொழிப் பற்றும் மனத்தில் பதித்துச் செயலில் நிகழ்த்த வேண்டுதலான் மன மென்னும் எசுர் வேதத்தும் உணர்த்தலாயிற்று.

இருக்கு-இலக்குமி-மொழி என்பன ஒரு பொருட் கிளவிகள். தாயின் பெருமையைத் தாய்க் கலைகளைப் பெருக்குதற்குங் காத்தற் கும் பரப்புதற்கு முறு கருவி யாயிருப்பது தாய்மொழியே யாகும். தாய்மொழியே நாட்டிற்கும் கலைகளுக்கும் இருதயமாக நடுநாயக மாகத் திகழ்வது. தாய்மொழி பயிலுதல், பயிற்றுவித்தல், பேசப் படுதல் தாய் மொழியைச் சீர்திருத்தி வளனுற வளர்த்தல் தாய் மொழியில் பல்கலைகளையும் பரப்புதல் தாய் நாட்டிற்கும் கலைகளுக் கும் மொழிக்கும் இழிவு நிகழின் எழுத்தாலும் பேச்சாலும் யாவருள்ளத்து மறிவுறுத்திப் பாதுகாத்தல் தாய்த் தொண்டாகும். நாட்டின் நலனும், கலைகளின் பெருக்கும் மொழியின் உயர்வும் வாக்கி னால் வெளிப்பட வேண்டுதலான் வாக்கென்னும் இருக்கு வேதத்தி லும் மொழியலாயிற்று. நாட்டை அல்லது மக்கள் வாழ்க்கையை உயர்த்திடுதற்கு ஆன்மவலி யெய்தி, மனத்தினின்றெழுங் கலைகளைப் பெருக்கி, நெஞ்சத்தினின்று தோன்று மொலிகளாகிய மொழி களால் பிறர்க் கறிவுறுத்திச் சுதந்திரமாக நடைபெறுவித்தல் தாய்த் தொண்டாகும்.

நமது இலக்குமி தாய் நாட்டு மக்கள் பொருட்டு நாட்டின் புகழையும், நாட்டின் கலைகளையும், நாட்டின் மொழியையும் வளர்த்து யாவ ருள்ளத்தும் பதித்து இன்னோரன்ன தாய்த் தொண் டாற்றி இவ்வுலகில் பல்லாண்டு பல்லாண்டு நிலவிடுக. ஓம்.

படமாடக் கோயிற் பகவற் கொன்றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

——

முற்பிறப்புச் சரித்திரங்கள்.

BY

கடஞ்சி.

முன்னுரை.

உலகத்தில் வாழும் பல வகைப்பட்ட மதங்களுள், ஞானிகளாலும் நீந்தக் கூடாத ஆழத்தையும், சிறுவரும் பருகக் கூடிய தெளிவையும் உடையதாய், ஆரம்ப காலம் இன்னதென்று அறியக் கூடாததாய், பண்டு தொடங்கி இன்றுவரை அழிவில்லாததாய், பல்லாயிரக்கணக்கான ஆன்மாக்களுக்கு முத்தி நெறியைப் புகட்டி உய்விப்பதாயுள்ளது இந்துமதமென்று சொல்லப்படுவது. அவ்வகை உயர்வையுடைய இந்துமதத்திற்கு, இருகண்கள் போலப் பிரதானமா யுள்ளவை " கருமம், " மறுபிறப்பு " என்ற இரு நியதிகள். அவற்றுள், அவனவன் விதைத்ததை அவனவன் அறுத்தே தீர வேண்டுமென்பது கரும நியதியாகும், ஆன்மா ஒவ்வொன்றும், அப்படி அறுத்துத் தீரும்வரையிலும், அத்துடன் தன் சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை எய்தும்வரையிலும் திரும்பத் திரும்பப் பிறந்தே தீரவேண்டுமென்பது மறுபிறப் பென்னும் நியதியாகும்.

" பார்ப்பாருக்குப் பணத்தைக் கொடுத்தால் மேற்பிறப்பை மாற்றிவைப்பார்கள் " என்று சொன்னவரை நான் இதுவரை காணவில்லை. ஆனால், அந்தணருக்குப் பொருளைவழங்குவதால் கருமத்தின் பலனை அனுபவியாமலே கழித்து விடலா மென்ற கொள்கை இந்துக்களுள் எங்கும் இருந்து வருகிறது. தென்னாட்டில் " கரும சாந்தி " யென்பது யாவரு மறிந்த ஒரு காரியம், அது, பண்டே யுண்டான உண்மையோ, இன்று உண்டான ஏமாற்றோ எனக்குத் தெரியவில்லை. புது நாகரீகத்தைச் சேர்ந்து இதில் நம்பிக்கை யற்றோருங்கூட உடலுக்கோ, மனதுக்கோ ஒரு நோவு கண்டு விட்டால், உடனே தாமாகவோ தம்மினும் மூடராயுள்ள வீட்டுப் பெண்களின் ஏவுதலினாலேயோ " கருமசாந்தி" கழிக்கத் தீர்மானஞ் செய்து விடுகிறார்கள். தீர்மானஞ் செய்ததும் " பூர்வகிரந்தம் " என்ற பெயரால். ஒரு வண்டிப் பாரம் பழைய ஏடுகளைத் திரட்டி வைத்துக் கொண்டு, ஏமாளிகளை யெதிர்பார்த்திருக்குஞ் சில பகற் கொள்ளைக் காரரைத் தேடிச்செல்கிறார்கள். அவர்கள், பிறந்த நாள் நட்சத்திரங் கேட்டோ, கையிலுள்ள ரேகைகளைக் கவனித்தோ, சில ஏடுகளைப் பொறுக்கியெடுத்து, " நீ போன பிறப்பில் இன்னின்ன குற்றஞ் செய்தபடியால், இப்போது இந்தத் துன்பம் நேர்ந்தது. அதற்கு இன்னின்ன பரிகாரங்கள் செய்ய வேண்டு " மென்று, தேடி வந்தவரின் தகுதியை அனுசரித்து ஐநூறுக்கோ, ஆயிரத்திற்கோ ஒரு செலவைச் சொல்லிவைக்கிறார்கள். எழுபத்தைந்து வயதுவரை இருப்பாளென்றும் ஏழெட்டு ஆண்மக்களைப்பெறுவாளென்றும் மேற்சொன்ன பூர்வகிரந்தங்களால் சாந்திகழிக்கப்பட்ட ஒரு பெண்மணி

யானவள், ஒரு பெண்மகவைமாத்திரம் விட்டு விட்டுப் பதினெட்டாவது வயசில் இறந்து போன ஒன்று தான் என் காட்சி யனுபவத்திற் பட்டது. என் கேள்வியனுபவத்தில் வந்த பல வர்த்தமானங்களில், ஒரு காரியம் மாத்திரம் எனக்கு ஆச்சரியமாகப் புலப்பட்டது. எல்லோரும் காராம்பசுவைக் கொல்லுதல் அல்லது பசுவின் காலை ஒடித்தல் என்ற இரண்டி லொரு பாவத்திற்காகவே துன்பப்படுவதாகச் சொல்லிக் கொண்டார்கள். மற்றக் கெட்ட கருமங்களுக்குப் பாபமில்லை போலும். பணச் செழிப்பால் பல கிரந்தக் காரரிடஞ் சென்றவர்கள், ஒன்றுக் கொன்று முரண்படுவதையுஞ் சொல்லிக் கொண்டார்கள்.

இனி, இந்த ஏடுசளிற் சொல்லப்பட்டிருக்கும் முற்பிறப்பு வரலாறுகள் எவ்வளவு தூரம் நம்பக் கூடியவை யென்பதைத் தென்னாட்டில் ஜோதிடமணி யென விளங்கும், திருவாளர் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், சாஸ்திரயுக்தமாக அனேக வியாசங்களாலும் உபன்னியாசங்களாலும் வெளியிட்டிருக்கிறார்கள். அதை வாசித்தறிந்தவர்கள், அப்புறமும், பூர்வ கிரந்தக்காரரை நம்பி மோசம் போகார்களென்பது என்னுடைய முழுநம்பிக்கை.

மேலே சொல்லப்பட்டது உண்மையானல், முற்பிறப்பு வரலாறுகளைக் கண்டறியலாமென்று இந்துமதத்திற் கூறப்பட்டிருப்பதும் பொய்தானோ வென்ற கேள்விபிறப்பது இயல்பு. அதையுஞ் சிறிது ஆராய்ந்து நோக்குவோம். தற்காலத்து மேனாட்டாருக்குள், ஏறக்குறைய ஐம்பது வருஷமாக "க்ளெயர் வாயன்ஸ்" திவ்விய திருஷ்டி அல்லது தூய காட்சியென்ற ஒரு சக்தி உலாவிவருகிறது. அது பெண்களிடத்திலேயே அதிகமாய்க் காணப்படுகிறது. அச்சக்தி வாய்ந்த ஒருவரை அமைதியான விடத்தில் உறங்கவைத்து, அவர் கையிலாவது நெற்றியிலாவது ஒரு மோதிரத்தை வைத்தால், அம் மோதிரத்திலுள்ள பொன்னினுடைய காட்சியில் நடந்த காரியங்களை யெல்லாம், பொன் வெட்டி யெடுத்த காலம் முதல் தன் நெற்றியில் வந்த நேரம்வரையில், வரிசைக் கிரமமாக அவர் அந்த உறக்கத்தோடேயே எடுத்துச் சொல்லுவார். இதைப் பலகாலமாகப் பல வேறு இடங்களில் பல வகைப்பட்ட மனிதரை வைத்து ஆராய்ச்சி செய்து இதில் நம்பிக்கை கொண்ட ஆங்கில சாஸ்திரிகள், புகைப்படமெடுக்கிற கண்ணடியில் உருவங்கள் பதிகிறமாதிரி, ஒவ்வொரு பொருளின் ஒவ்வொரு அணுவிலும், அதைச் சுற்றி நடக்குங்காரியங்களெல்லாஞ் சித்திர ரூபமாய்ப் பதிந்து கிடக்கின்றன வென்றும், அவற்றை அகக்கண்ணல் கண்டு வாசிக்கக் கூடிய பேருக்கு அவை வெளியாகுமென்றும், அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த நியதியைக் கொஞ்சங் கூட ஆழ ஆராய்ந்தால், உலக மெங்கும் பரந்து நிற்கும் ஆகாயதத்துவத்தின் ஒவ்வொரு அணுவிலும், உலகந் தோன்றிய காலம் முதல் இன்றுவரை நடந்த காரியங்கள் முழுவனவும் என்றென்றைக்கும் அழியாமல் பொறிந்து கிடக்குமென்றும், அதனை வாசிக்கக்கூடிய

யோகக்கண்ணுடையாருக்கு அவை யெல்லாந் தெற்றெனப்புலப்படு மென்றும் நன்ருய் விளங்கும்.

இனி, இதைப் பற்றி நம்முடைய இந்துமதத்திற் சொல்லப்பட்டிருப்பதை ஆராய்ந்து பார்ப்போம். இதிகாச புராணங்களில் நம்பிக்கையற்றுப் போன இந்த ஆங்கில நாகரீக காலத்தில், சித்திர புத்திர நயினுர் கதையை ஒருவன் மேற் கோளாக எடுத்துச் சொல்வது வெறுஞ் சிரிப்புக்கே இடமாகும். ஆனுலும், அதில் ஆழ்ந்துகிடக்கும் பெரிய உண்மைகளை விரிவா யெழுத அவகாசமில்லையாயினும், இங்கு வேண்டிய இரண்டொரு விபரங்களை மாத்திர மெடுத்துக் காட்டுகிறேன்.

(1) நயினுருக்குச் "சித்திரபுத்திர" ரென்றும் "சித்திரகுப்த" ரென்றும் பெயர்கள் வழங்குகின்றன. அவற்றிற்கு முறையே சித்திரமாகப்பிறந்தவரென்றும், மறைந்து கிடக்குஞ் சித்திர உருவுடையவரென்றும் பொருள்படும்.

(2) சித்திரபுத்திரர் உருவெடுத்து, உலக கர்த்தாவையும் உலக மாதாவையும் அடிபணிந்து நிற்பவரை, எம்பெருமான்

"எக்கோடி காலம் இயல்பாக வுள்ள மட்டும்
அக்காலம் நீடூழி யாகவே தானிருப்பீர்,
பல்லாயிரங் கோடி பகிரண்ட முள்ள மட்டும்
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்திருப்பீர்."

என்று வாழ்த்துவதிலிருந்து, அந்நாயனுர், எல்லா அண்டங்களிலும் நிறைந்து அவற்றிற்கு மூலகாரணமாயுமிருக்கும் மாயாதத்துவமாகிய ஆதி அணுக்கூட்டம் முழுவதிலும் வியாபித்து நிற்பவரென்பது புலப்படுகின்றது. ஆகவே, எந்த அண்டத்திலுள்ள எந்தக் கோடியிலாயினும் என்ன நடந்தாலும் அது அவருடைய நுண்ணுடம்புக்குள்ளேயே நடைபெறு மென்றுந் தெரிகிறது.

(3) அவரை வாழ்த்தியபின், அவருடைய தொழில் இன்னதென்று எந்தை பகவான் எடுத்துரைக்கும்போது,

"எங்களுடமனதில் இருக்கும் நினைவுகளும்
தேவ ரசுராள் ரிஷி முனிகள் மாதவர்கள்
எறும்புகடை யானைதலை எண்பத்து நாலுநா
ருயிரம் யோனிபேத மாகும் உயிர்களெல்லாம்

செய்கின்ற தெல்லாந் திறமாயெழுதுமெ"ன் பதிலிருந்தும் பின்னுல் கணக்கெழுதும் விதஞ் சொல்வதிலிருந்தும், செய்கைகள் மாத்திரமன்றி நினைவாகிய எண்ணங்களுஞ் சித்திர மாகப் பதியுமென்பது பெறப்படுகின்றது.

(4) இனி, எம்பெருமான், "யாரு மறியாதார் அரும்பொருளார் தன்மகனுர்" சித்திரபுத்திரரிடம் கணக்கெழுதும் வித மறிவிப்பது எல்லாவற்றிலும் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டியது. அதாவது,

"கரும நிழல் வந்து கணக்கில் தினசரியும்
எழுதித் தொகைப்படுத்தி இயற்றும் பயன்படியே
பழுதுகள் வாராமல் பார்த்தவுட னவ்வேடு
எடுத்தவர்கள் வாசிக்க இந்த வரந் தந்தோம் நாம்
தடுத்தவர்கள் பேசாமல் தன்னிழலே சாட்சி சொல்லும்,
இச்சாட்சி வந்து இயல்பாய்க் கணக்கெழுதும் ;
உனக்குப் பிரயாசை ஒன்றுமில்லை யென்று சொன்னுர்"

நிழல், சாயை, சித்திரம்—இவை ஒரு தன்மையன வென்பது சொல்லாமலே விளங்கும். புகைப் படத்தில் விழும் நிழலே சித்திரமாகக் காணப்படுவதை யாவரும் அறிவார்கள். தேவர் முத லெறும் பீருக வுள்ள எல்லா வுயிர்களும், மனம் மொழிமெய்களால் செய்யும் கருமத்தினுடைய "நிழலே வந்து இயல்பாய்க் கணக்கெழுதும், நிழலே சாட்சி சொல்லும்." எனவே சித்திரபுத்திரரின் கணக்குச் சுருணையாகிய மாயா தத்துவத்தில், அக்கருமங்களின் சாயை சித்திர ரூபமாகப் பதியுமென்பது சந்தேகமறப் பெறக்கிடக்கின்றது. பழுதுகள் வாராமலும் தடுத்து யாரும் பேசாமலும் சாட்சி சொல்லக்கூடியது இக்கணக்கர் பெருமானுடைய ஏ டொன்றே யன்றி, மற்றப் பழைய ஏட்டுக்குன்றுகளெல்லாம் பார்ப்பாருக்குப் பெரும் ஏடுகளே யாயினும் கேட்போருக்கு வெறும் ஏடுகளேயாகும். யோக நெறி பயின்று நெற்றிக்கண் திறந்த ஞானிகள், மேற் சொன்ன கணக்கிலிருந்து ஆராய்ந்து எழுதுவதே பழுதில்லாததும் முரண்படாததுமான முற்பிறப்பு வரலாருகும். அங்ஙனம் ஆராய்ந்து ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் வரலாற்றென்றை, ஆங்கிலப் பயிற்சி யில்லாதவரும் அசம்பா விதமான நாவல்களை வைத்துக்கொண்டு வீண் பொழுது போக்குவோருமாகிய நம்முடைய பெண்களின் நன்மையைக் கருதிச் சுருக்கமாகத் தமிழில் எழுதுவ தானேன்.

ஆன்மாக்கள் ஒவ்வொரு பிறப்பிலு மெடுக்கும் வெவ்வேறு பெயர்களை உபயோகித்தெழுதுவதானுல், எழுதுவோருக்கும் படிப்போருக்கும் குழப்பத்தையே உண்டு பண்ணுமாகையால் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் முதலிலிருந்து இறுதிவரை ஒரே பெயரே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ரோகணியின்

இற்றைக்கு முந்திய இருபத்திநான்கு பிறப்புகள்

நம்பர்.	பிறப்பு.	இறப்பு.	பால்.	பிறந்த இடம்.	வயசு	பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் அரூபமாயில் கழிந்த காலம்.
	கி. மு.	கி. மு.				
1	23875	23815	ஆண்	ஹாவேயிதீவு	60	837
2	22978	22921	பெண்	மடகாஸ்கர்தீவு	57	713
3	22208	22152	பெண்	மலாக்கா	56	612
4	21540	21504	பெண்	தென்னிந்தியா	36	—
5	21504	21456	பெண்	ஷை	48	—
6	21456	21392	பெண்	ஷை	64	1775
7	19617	19546	ஆண்	பாக்த்ரீரியா	71	1245
8	18301	18234	ஆண்	மொராக்கோ	67	1006
9	17228	17137	ஆண்	போஸிதானிஸ்தீவு	91	1447
10	15690	15632	ஆண்	தார்த்தாரி	58	1125
11	14507	14451	ஆண்	கானடா	56	780
12	13671	13633	பெண்	போஸிதானிஸ்தீவு	38	1543
13	12090	12005	பெண்	பெரு	85	2319
14	9686	9673	பெண்	சீனு	13	70
15	9603	9564	பெண்	போஸிதானிஸ்தீவு	39	1239
16	8325	8260	பெண்	எற்ரூரியா	95	1502
17	6758	6706	பெண்	தார்த்தாரி	52	1077
18	5629	5567	பெண்	இந்தியா	62	1552
19	4015	3944	ஆண்	எகிப்து	71	1208
20	2736	2688	ஆண்	தென்னுபிரிக்கா	48	809
21	1879	1862	ஆண்	பெர்ஸியா	17	341
22	1521	1490	ஆண்	ஆசியாமைனர்	31	991
23	499	423	ஆண்	கிரீஸ்	76	2020
	கி. பி.	கி. பி.				
24	1597	1620	ஆண்	வெனிஸ்	23	276
25	1896	—	ஆண்	வட அமெரிக்கா	—	—

முற்பிறப்புச் சரித்திரங்கள்

I

பஸிபிக் மகா சமுத்திரத்தில், படத்தில் (1) அடையாள மிட்டிருக்கிற இடத்தில், என்றும் அணையாத எரிமலைகள் நிறைந்ததும், ஏழெட்டுத் தீவுகள் ஒன்று சேர்ந்ததுமான "ஹாவேயி" என்ற ஒரு கூட்டத்தீவுகளுண்டு. அவ்விடத்து மனிதர்கள் நாகரீகம் சிறிது மில்லாத நிகிரோக் கூட்டத்தவர். அவர்கள் அந்த எரிமலைகளைத் தெய்வங்களாகக் கொண்டு, அடிவாரங்களில் அவற்றிற்குக் கோவில்கள் கட்டித் தினப்படி பூசை முதலியவை நடத்தி வந்தார்கள். நாகரீகம் மிகுந்ததாகச் சொல்லப்படும் நமது ஊர்களில், அம்மனென்று பேர்வைத்து ஆடுமாடுகளை அநியாயமாய் உயிர்வாங்குவது போல, மேற் சொன்ன தெய்வங்களுக்கும் அவர்கள் மகோற்சவங்கள் கொண்டாடி, அத்தினங்களில் நரபலி கொடுப்பார்கள். ஊரிலுள்ள குற்றவாளிகளையும், போரில் பிடித்த கைதிகளையும் பலியாகக் கொடுத்துப் பின்னும் போதாது வந்தால், குடிகளாயுள்ள மனிதரைத் தெரிந்தெடுத்துக் கொலை செய்வார்கள்.

இத்தகைய சாதியில், இன்றைக்கு ஏறக்குறைய இருபத்தாறுயிரம் ஆண்டுகளுக்குமுன், அக்கூட்டத்தீவுகளில் ஒன்றாகிய 'ஒவாகு' வில், 'வையாலை' யென்ற ஊருக்குச் சமீபத்துள்ள ஒரு கிராமத்தில், ஒவாகுவிலுள்ள பூசாரிகளுக் கெல்லாம் பிரதமரும், வயிரமலை என்ற அவ்விடத்து எரிமலைத் தெய்வத்துக்கு வழிபாடு நடத்துபவருமாகிய ஆயிலியர் என்றொருவர் இருந்தார். அவருக்குக் கேட்டை என்னும் மனைவி வயிற்றில், கி. மு. 23875-ம் ஆண்டில் நம் கதா நாயகராகிய ரோகிணி யானவர் பிறந்தார். பிறந்து சில காலத்தில், ஆயிலியர் எல்லாத் தீவுகளுக்கும் பிரதம குருவாக அரசனால் நியமிக்கப் படவே, அவர், குடும்பத்தோடு ஒவாகு விட்டு அரச னிருப்பிடமாகிய ஹாவேயி தீவுக்குக் குடியிருக்கச் சென்றார்.

ஆயிலியர் மந்திரத்திலும், தந்திரத்திலும் மிக வல்லவர். அன்பென்ற வாக்கொன்று உள்ளதாகவே அறியாதவர். அதிகாரத்தில் அதிக அவா வுடையவர். அதைக் கொண்டு முடிப்பதில் எந்தக் கொடுமைக்கும் பின் வாங்காதவர்; கொடுமையே குணமாக அமைந்த கூட்டத்தாரால் கொடியவ ரென்று கொள்ளப்பட வேண்டுமானால், அவர் எத்தன்மைய ரென்பது சொல்லாமலே விளங்கும்.

பயிர் மேனி தாழ்ந்தாலும், பசுக்கள் மலடானாலும், பில்லி சூனியம் வைக்கவானாலும், பிரதம குருவையே தேடிப் பலரும் வருவார்கள். ஆயிலியர் தன் மந்திரங்களோடு, நஞ்சு முதலிய தந்திரோபாயங்களையும் நயமாக நடத்திக் கூடியவரை காரியங்களைச் சாதித்து வருவார். யாரையேனுஞ் சபிக்கும்படி கூலி கொடுப்போர் முன், தன் கோவில் "கிலனீயா"க் கடவுளையாவது, அவர் மகளாகிய "பீலி" அம்மனையாவது பிரார்த்தித்துச் சாபமிட்ட போதிலும், ஒரு வேலை சகாயமில்லாமலே அந்தத் தெய்வங்கள் சாபத்தை

நிறை வேற்றி விடுமென்று சந்தேகித்துச் சும்மாயிருந்துவிட மாட்டார். பயிர் தீய்ந்து போகச் சபித்தால், பீலி அம்மனுக்குதவியாக, ராத்திரியே உப்பு வென்னீரை வயலில் ஊற்றிவைப்பார். பூசாரிகளே வைத்தியரு மாகையால், சாக வரங் கொடுத்த இடங்களில் சரியான மருந்துகளால் கடவுள் பேரை வைத்துச் சாபத்தை நிறைவேற்றிக் கொள்வார். குறைதீறக் கொடுக்க இயலாத சிக்காளிகளெல்லோரும், இக்குருக்கள்மாருக்குப் பயந்து வைத்தியஞ் செய்யாமலே இருந்து விடுவது வழக்கம். இவ்வகைச் சாமர்த்தியங்களை ஆயிலியர் மாத்திரமல்ல, அவ்விடத்துக் குருக்கள்மா ரெல்லோரும் அனுசரித்தே வந்தார்கள். ஆனால் அவர்க ளெல்லாரிலுங் கைதேர்ந்தவர் ஆயிலியர்.

அடிபிடி ஆங்காரக் காரனுக்கு அரிவாள் சீதனங் கிடைத்தாற்போன்று, ஆயிலியர் ஆசைக்கேற்ப அமைந்தவை, அவர் பட்டத்துக்குரிய ஆடை ஆபரணங்கள். பெரும் பூசணிக்காய் வண்ணத்தில், வீரப்பல்லும் கூரியமூக்கும், முட்டைக் கண்ணும் முருக்கம்பூவாயும் அமைந்த பிரதம குருவின் சின்னமாகிய கரிய பெரிய கோரரூபமான மரத்தலையைக் கழுத்திலணிந்து சிவப்பு இறகுகளாலாகிய பாவாடையை இடுப்பில் தரித்து, நரபலிக்குரிய வாளையுங் கையிலேந்தி நிற்கும் போது, அவரைக் கண்டு நடுங்காத மனிதர் அத்தீவுகளில் இரார். நரபலி யல்லாத சாதாரண பூஜை சமயங்களில் அவர் மஞ்சள் இறகுப் பாவாடை தரித்திருப்பார். இவ்வாறு குணமுங் கோலமும் ஒன்று சேரவே அரசனுக்கு அடங்கிய ஸ்தானத்தை வகித்த போதிலும், அவனைவிட அதிக ஆக்கினை செலுத்தி வந்தார் ஆயிலியர்.

ஆயிலியர் மனைவியான கேட்டையம்மாள் மிகவும் சுபாவக்காரி. ஆயிலியருக்கு மிகவும் அஞ்சினவள். அவர் மந்திர சக்திகளில் மிகுந்த நம்பிக்கை யுள்ளவள். ஆகவே மகளாகிய ரோகிணியும் அந்த நம்பிக்கையும் பயமுமே ஊட்டி வளர்க்கப்பட்டு வந்தாள். ஆயிலியர் மிகவுங் கல்நெஞ்சராயினும் மகளிடத்து ஒரு மாதிரிப் பற்றுதலுடையவராகவே யிருந்தவர். கடற் களியில் அதிகப் பிரியமுள்ள ரோகிணியோ பகலில் பாதி நேரந் தோணியிலும், மற்ற நேரங் கரையிலுமாகச் சுற்றித் திரிவதில் தன் இளம்பருவத்தைக் கழித்து வந்தாள்.

மூத்த மகளாகிய ரோகிணி, தன் குடும்பத் தொழிலாகிய குருப்பட்டத்தை ஆயிலியருக்குப் பின் வகிக்க வேண்டியவளாகையால், சிறுவயது முதலே பில்லி வைப்பு மந்திரம், பேயோட்டு மந்திரங்களெல்லாம் வாய்ப்பாடமாகத் தகப்பனால் படிப்பிக்கப் பட்டு வந்தவள். அவளுடைய பதினாலாவது வயதில் பட்டத்திற்குரிய முதல் தீக்ஷையை அவளுக்குச் செய்வித்தார்கள். அதாவது, ஒரு நாள் பூழுவதும் அவளை உபவாச மிருத்தி, மறுநாள் அவள் மார்பின் இருபுறத்திலும் புலிவேஷம் போலுள்ள வெட்டுக்காயங்களைக் கீறி,

அவற்றின் வாய் அடைபட்டுப் போகாதபடி உள்ளே சிறுய்த் துண்டு களைக் கொடுத்து, மரப்பட்டையைக் கல்லில் சதைத் துண்டாக்கப் பட்ட ஒருவிதச் சல்லடையினுல் காயங்களை மூடிக் கட்டிவைத்தார் கள். கொழுத்திட்டியதுபோல மார்பில் காணப்படுங் காயங்களே சின்னப் பட்டமென்பதற்கு அறிகுறி.

இன்னும், சின்னப்பட்டத்தின் சின்னங்களாகக் கழுத்தில் சில மாசிச் சரங்களையும், அரையில் பலவர்ணமுள்ள துணிமுடிச்சுக்களா லும் சிப்பிகளாலுஞ் செய்யப்பட்ட ஒரு சல்லடத்தையுங் கட்டினுர் கள். பூர்வ காலத்தில், இந்தச் சல்லட மொன்றே அவ்விடத்தில், சாதாரண உடையாயிருந்ததாகத் தெரியவருகிறது. மேற் சொன்ன நூற்ருண்டில் பூசாரிகள் மாத்திரம் இவற்றைக் குருச்சின்னமாக உபயோகித்து வந்தார்கள்.

இவ்விதமே ரோகிணியின் 17, 19, 21 வது வயசுகளிலும், உபவாசம், மந்திரம் முதலியவற்ருேடு கூடிய வெவ்வேறு விதமான கிரியைகள் நடத்தப் பட்டன. 21-வது வயசில் நடந்தது கடைசித் தீக்ஷை. அதில், கசப்பும் அருவருப்பு மான காரமருந்துகளைக் கூட் டிக் கஷாய மிறக்கி, ரோகிணிக்குக் குடிப்பாட்டினுர்கள். குடித் ததும் அவர் மூர்ச்சித்து விழவே, அவர் மேல் தெய்வத்தை வருத் துவதாகச் சில விசேஷ மந்திரங்களை ஆயிலியர் உச்சரிக்கவும், மூர்ச்சித்துக் கிடந்தவர் மேல் ஆவேசம் உண்டாய்ச் சற்று நேரத்தில் மறைந்தது. ரோகிணியும் மூர்ச்சை தெளிந் தெழுந்து முழுப்பட் டம் பெற்ற குருக்களானுர்.

ஆயிலியரும் ரோகிணியும் ஒரே அச்சில் வார்க்கப் பட்டவர்கள். தகப்பனை அறிந்தோர் மகனை அறிய வேண்டிய அவசியமில்லை. ஆயிலியர் ஊரில் நடத்தி வந்த ஆக்கினை அநியாயங்களை, ரோகிணி யானவர் சிறுவயது முதலே தன் தரத்துப் பிள்ளைகள்மேல் பழகி வந்தார். அடுத்தோரை அச்சமுறுத்துவதில் அதிக சமர்த்தர். எடுத்த காரியம் முடிப்பதில் பழிபாவங்களுக்குப் பின் வாங்கமாட் டார். தன்னிடந் தாழ்மையாக நடக்காதவர்களைத் தகப்பனு டையவும் தன்னுடையவுமான மந்திர தந்திரங்களால் கால்கை முடக்கியும் கனவில் பயமுறுத்தியும் இன்னும் அநேக வழிகளாலும் அடக்கி வைப்பார்.

இப்படி பயந்தோரும் பகைத்தோரு மாய ரோகிணியின் தோழர்களில், பூர்வசம்பந்த வாசனையால் அவரிடத்தில் பக்தியும் அன்பும் அமைந்தவரான அஷ்டம ரென்பவர் ஒருவர் இருந்தார். ரோகிணி யானவர், உலகத்தில் தன்னை நேசிப்பவர் அஷ்டமரைத் தவிர வேறு யாரு மில்லையென நன்ருக அறிந்திருந்தும், அவருக்கு மணம் செய்யத் தீர்மானிக்கப் பட்டிருந்த மூல மென்ற மங்கையைக் கண்டு மோகங் கொண்டார். அஷ்டமர் விவாகத்துக்கு வேண்டி நடத்திவரும் கோரிக்கைகளையும், அவருக்கும் மூலத்துக்கும் உண்டா

யிருந்த நெடுநாளைய நேசத்தையும், நன்றாய் அறிந்திருந்தும், சிறிதேனும் வாஞ்சை சிறிது மில்லாத ரோகிணியானவர், மூலத்தைத் தனக்கு மனைவியாக விடும்படி அஷ்டமரைக் கேட்க, அவர் சம்மதியாதது கண்டு, அவரைத் தன் முழுச்சாமர்த்தியத்தையுங் கொண்டு துன்புறுத்தத் தொடங்கினர். ஆனல், அவர் சாபங்களும், மந்திரங் களும், செய்வினைகளும், மூலத் தம்மானை தனக்குப் பிராணனாகப் பாவித்து வந்த அஷ்டமர்மீது, பாறையிலெய்த அம்புகளைப்போ லப் பயனற்றுப்போவதைக் கண்டு, அவரை விண்ணுல கேற்றுவதேவழி யென்று தீர்மானித்து, நஞ்சு கலந்த மருந்தொன்றை அவருக்கு உபாயத்தால் ஊட்டிவைத்தார். இது காரணமாக நெடுங்காலஞ் சீக்கிலழுந்திய அஷ்டமருக்குத் தான் இறந்துபோவோ மென்ற ஐயமுண்டாகவே, தன் காதலியை அழைத்து, "இனி நீ எனக்காகக் காத்திருப்பதில் யாதொரு பயனுமில்லை. உன் மனதுக் கிசைந்த மணவாளர் இன்னும் பலர் கிடைப்பாராயினும், கல் நெஞ்சனுங் கொடும்பாவியுமான ரோகிணி உன்னைக் கைப்படுத்துகிறவரை உன் னையும் உன் பெற்றோரையும் பந்துகளையும் புண்படுத்திக் கொண்டே யிருப்பான். ஆகையால் அந்தத் துரோகியை மணந்து கொள்வது உத்தமம்." என்று வேண்டிக் கொண்டார். அஷ்டமர்போலவே அவளும் ரோகிணியை அருவருத்தாளாயினும் தன் உறன்முறையார் களுக் குண்டாகுந் துன்பங்களுக்குப் பயந்து கடைசியாக அவரையே மணந்து கொண்டாள்.

மணந்தும் அவளுக்குத் துன்பம் மாறியபா டில்லை. கைக் கொண்ட சில நாளில் தன் காமவெறி தீர்ந்த கணவன் மூலத்தை மிகவும் கொடுமையாக நடத்த ஆரம்பித்தான். அவள் ஏதாவது முறுமுறுத்தால் அவளை ஆக்கவும் அழிக்கவும் தன் கையிலுள்ள தாகப் பயமுறுத்துவான்.

இப்படியிருக்குங்காலத்தில், ரோகிணியின் தகப்பனான ஆயிலி யருக்கும் அரசனுக்கும் அதிகார காரியங்களில் சில மனஸ்தாபங்கள் நேர, அரசன் தன்னை அவமதித்த தாகக்கருதிய ஆயிலியர், அதற்குப் பதில் பழிவாங்கக் கருதி, அரசனைக் கொலை செய்வதற்கான கோரிக் கைகள் செய்யத் தொடங்கினர். இது அரசன் காதுக்கெட்டவே, அவன் கோபங்கொண்டு, ஆயிலியரைத் தன் நாட்டைவிட்டுத் துரத்தி, அவர் வகித்த வேலையில், ரோகிணியை நியமித்தார்.

தனக்கென்று அதிகாரமில்லாதபோதே தகப்பன் ஆக்கினையை வைத்துக் கொண்டு தலைகால் தெரியாது நடந்தவர், அரசனுக்கு அடுத்த ஸ்தானமாகிய பிரதமகுருத்துவமும் எய்தினரானல், என்ன செய்வாரென்பதைச் சொல்லவும் வேண்டுமா! ரோகிணிக்குப் பட் டங்கிடைத்ததும், தன் தற்காலப்பதவிக்குத் தன் மனைவி குடும்பம் செல்வாக்கில் குறைந்ததென ஆலோசித்து, அவளைத் தகுந்த மருந்து களால் எமலோகத்திற்கு அனுப்பி விட்டு, அதன்பின் அரசன் தங் கையை மணந்துகொண்டார்.

அவர் அடுத்த முயற்சி அஷ்டமரை மாற்றுவதில்! முன்பு சாகக்கிடந்த அஷ்டமர் தெய்வச் சகாயத்தால் சீக்குத் தெளிந்தெழுந்து, ரோகிணி தனக்குச் செய்த வஞ்சனைக்காக அவரை எப்பொழுது தொலைப்போமென் றெதிர்பார்த்திருந்தார். இதை நன்கறிந்திருந்த ரோகிணி, இனி அவர் காதலியுங் கொலையுண்டபிறகு தனக்குத் தீங்குண்டாக்குவதில் அஷ்டமர் கணமுந் தாழ்க்க மாட்டாரெனக்கருதி, அவருக்கு முந்திக்கொள்ள வெண்ணி, அரசனிடஞ் சென்று, "அரசே, என் தகப்பனை ஆயிலியர் இந் நாடுவிட்டுச் சென்றதும், அபாயமெல்லாம் நீங்கியதாக நினைத்ததென்ன! அஷ்டமரென்பவர் அரசனுக்கு விரோதமாய்ச் செய்துகொண்டிருக்குஞ் சூழ்ச்சிகளை அறிந்ததில்லையோ" வென்ன, அரசன், "நீ எப்படி அறிவாயெ"ன்று கேட்க, சரிப்படுத்திவைத்திருந்த சாட்சிகளைக் கொண்டு ரோகிணி ரூபிக்கவும், அஷ்டமரை அரசன் சிறையிலடைத்து வைத்தான். அடைபட்டுக் கொஞ்ச நாளில், காவலாளர் சகாயத்தையுந் தன் கைமருந்தையுங் கொண்டு, அஷ்டமரை மேலுலகுக்கனுப்பிவைத்தார்.

நாளுக்கு நாள் ரோகிணியின் கொடுஞ்செயல்களும் அதிகாரமுங் கூடிக்கொண்டே வந்தன. தன்னிடந் தீர்ப்புக்காக வரும் வழக்குகளில், நியாயத்தை நன்குயறிந்திருந்தாலும், அதிக லஞ்சங் கொடுப்போருக்கே அனுகூலஞ் செய்து வைப்பார். இவ்விதமாக, அவர் எண்ணில்லாத இறகு உடைகளையும், ஆடுமாடுகளையும், இன்னும் அநேக விதமான சொத்துக்களையுஞ் சம்பாதித்தார். கோவில் விக்கிரகங்களின் வாயில் குழாய்களைக் கொடுத்து, அவற்றைப் பின்னாலிருந்து பேசுவிப்பார். நேரே தன் சொற் கேளாதவரை, இவ்விதந் தெய்வ வாயிலாக ஆட்டிவைப்பார்.

இன்னும், எரிமலைப் பிரதேசங்களில், "நீரெழுச்சி" யென்ற ஒருவகை ஊற்றுக்களுண்டு. அவற்றிலிருந்து சில சில சமயங்களில், கொதிக்கிற வென்னீர் மேலே குதித்தெழும்பும். அது ஐம்பது, அறுபது, நூறடி உயரம்வரையுங் கிளம்பும். ஒன்றுமறியாத ஈனர்களுக்குள்ளே பிறந்திருந்த போதிலும், ரோகிணி, தன் ஊரைச் சுற்றியுள்ள ஊற்றுக்களைப் பல முறையும் பார்த்ததிலிருந்து, இந் நீரெழுச்சியானது ஒரு காலக்கணக்கையும் நியதியையும் அனுசரித்தே உண்டாகின்றதென்பதைக் கண்டுபிடித்துக் கொண்டார். அதுமுதல், ஒவ்வொரு ஊற்றுங் கொதித்தெழும்புகிற சமயத்துக்குச் சற்று நேரத்திற்கு முன்னாக, ஊராரையெல்லாம் அவ்விடத்தில் வருவித்து, "இந்த ஊற்றுதானே கொதித்தெழும்புவதை நீங்கள் எத்தனையோ முறை பார்த்திருப்பீர்கள். ஆனால் நாம் ஆசைப்பட்டவேளை இதைக் கொதிக்கச் செய்வது நமக்கு இயலாத காரியமானாலும், என் வேண்டுகோளை யெல்லாங் கடவுள் நிறைவேற்றுவாரென்பதை உங்களுக்குக் காட்டுவதற்காக, இதை இப்போதே கொதிக்கப் பண்ணுகிறேன், பாருங்கள்!" என்று சில கைச் சைகைகளைக் காட்டிச் சில வெறுஞ் சொற்களைக்கணக்குப்படியுள்ள நேரம் வருகிறவரையில் வாய்க்குள்

முணு முணுத்துக் கொண்டிருக்கவும், தரைக்குள் ஆழ்ந்து கிடந்த தண்ணீரானது, சோளப் பொறி வாணம்மாதிரி ஆகாயத்திலெழும்புவதைக் கண்ட அரசன் முதல் ஆடுமேய்க்கி வரையுள்ள அவ்வூராரெல்லாரும் ரோகிணியையே கடவுளாக எண்ணி வணங்குவார்கள். ஒரு சமயத்தில் கணக்கில் தப்பு விட்ட ரோகிணியானவர் ஒருச் சாம நேரம்வரை தண்ணீர் மேலெழும்பாமை கண்டு, அது வரையில் பிரார்த்தித்துக் கொண்டேயிருக்க வேண்டிவந்தது. இவற்றையும் இன்னுமிவர் பிற செய்கைகளையுங் கவனிக்கும்போது, அறிவே சிறிது மற்ற நிக்ரோவருக்குள் பிறந்திருந்தபோதிலும் அவரினும் அதிகப் புத்திக் கூர்மை யுடையவரா யிருந்தா ரென்பது புலப்படுகின்றது. ஆயினும், மங்கள னென்ற தன் மகன் மேல் வைத்த வாஞ்சையைத் தவிர, வேறு அன்பென்பதை அறிந்தவரல்லர். அறிவில் அவ்விடத்து மிருகாண்டிகளுக்கு மேலாயிருந்தாலும், அன்பில் அவரினுந் தாழ்ந்தவராகவே யிருந்தார்.

தன் இரண்டாவது மனைவியின் தமையன் அரசனாயிருந்தவரை, ரோகிணியே அவன் பேரைவைத்து ஆண்டுவந்தார். அவனிறந்தபின், அவன் மகன் இவரை யலட்சியமாய் நடத்தவே, பிரதம குருவும் அரசனும் பிணங்க வாரம்பித்தார்கள். இருவரும் ஒருவரை யொருவர் அடக்கும்வழிகளை ஆலோசித்துக் கொண்டிருக்குங் காலத்தில், அடுத்துள்ள "கௌவை" யென்னுந் தீவிலிருந்து ராஜாங்க காரியமாகச் சில பிரதிநிதிகள் வந்து சேர்ந்தவரை, பிரதமகுருவின் துர்ப்போதனையின் பேரில் அரசன் கணிசக்குறைவாய் நடத்தவே, கௌவைத் தீவார் கோபங்கொண்டு உடனே படையெடுத்து வந்தார்கள். அது கண்ட அரசன், "கடவுளைக் கைக்குள் வைத்தாட்டுங் குருவே! கௌவைக்காரர் படகிலிருந்து நம்கரையில் வந்திறங்குமுன், கடலில் ஆழ்ந்து போகும்படி சபித்தருளும்." என்று ரோகிணியை வேண்டிக் கொள்ள, ரோகிணியுந் தன் சக்தியெல்லாங் கொண்டு சபித்தும், ஒன்றும் பயன்படாமற் போகக் கடைசியாய் அரசன் சேனைகளோடு சென்று சண்டைசெய்து அவர்களைத் துரத்த வேண்டி வந்தது. ரோகிணியின் தோல்வியைத் தீவார் அறிந்ததும், அன்று முதல் அவர் செல்வாக்குங் குறையத் தொடங்கிற்று. பயந் தொதுங்கியிருந்த அவருடைய பழம் பகைவரெல்லாரும், இது தான் சமயமென்று அரசனோடு சேர்ந்து கொண்டு அவரை அலட்சியஞ் செய்வதைக் கண்ட ரோகிணியானவர், மிகவுங் கோபங்கொண்டு, ஊரில் அநேக இடங்களில் அரசனுக்கு விரோதமாசக் கலகங்கள் உண்டு பண்ணத் தொடங்னார். அதைக் காரணமாகக் கொண்டு, அரசன் அவர் பட்டத்தையும் பறித்து, அவரை ஊரைவிட்டு ஓட்டும்படி உத்தரவும் பிறப்பித்தான்.

ரோகிணி அரசனாணையைக்கேட்டு ஒளித்தோடிக் கொண்டிருக்கும்போது, அவராகச் சம்பாதித்திருந்த அநேக பகைவரில், ஐப்பசி யென்பா னொருவன், அவரைத் தொடர்ந்து சென்று குத்திக் கொன்றான். ஐப்பசி யென்பான், அவ்விடத்தில் சதய மென்ற ஒரு பெரிய வீட்டுப் பெண்ணின் காதலன். பிரதம குருவின் அனுமதியில்லாமல்

விவாகம் நடத்துதல் கூடா தென்ற அவ்வூர் விதிப்படி, அவன் ரோகிணியின் சம்மதங் கேட்கச் சென்றபோது, சதயத்தின் தகப்ப னிடத்திருந்த சொத்தில், அதாவது, இறகாடை, ஆடுமாடுகளில், பெரும்பங்கைத் தனக்குக் கொடுத்தா லொழியத் தான் சம்மதங் கொடுப்பதில்லையென்று அவர் சொல்ல, சதயத்தின் தகப்பன் அதற் குடன்படாமையால், விவாகம் நின்று போயிற்று. ரோகிணியானவர், அதோடு நில்லாமல், சொத்தின் பேரிலுள்ள ஆசைமிகுதியால், சதயத் தம்மாளைத் தகப்பனைச் சம்மதிக்கச் செய்யும்படி மந்திர தந்திரங் களால் பயமுறுத்தவும், இயல்பாகவே பயந்தவளான சதயம் பைத் தியங்கொண்டு இறந்தாள். இந்தப் பழியைத் தீர்க்கப் பதைத்துக் கொண்டிருந்த ஐப்பசியானவன், சமயங்கிடைத்ததும் ரோகிணியை யுஞ் சதயத்தின் பின்னே அனுப்பிவைத்தான்.

ரோகிணி கொலையுண்ட பொழுது அவருக்கு வயது அறுபது. இறந்தபின், அவர் நரகத்தில் நெடுங்காலம் பட்ட கொடுந் துன்பங் களையும், பூமியில் அவருக்கிரையானோர் பேய்வடிவத்தோடு அவரைப் படுத்திய பாடுகளையும் அனுபவித்தறிதலன்றிச் சொல்லால் அறிவிக்க இயலாது. இப்படி அநேக காலம் நரகத்திலும், பின், மங்கள னென் னுன் மகன் மேல் வைத்த அன்பின் பலனாகச் சிறிது காலம் சுவர்க் கத்திலும், ஆக எண்ணூற்று முப்பத்தே ழாண்டுகள் கழித்துத் திரும்பவும் பூமியில் வந்து பிறந்தார்.

II

இந்துமகா சமுத்திரத்தில், படத்தில் (2) அடையாளமிட்டிருக் கிற இடத்தில், தென்னாப்பிரிக்காவின் கீழ்க்கரையருகில், ஆயிரமைல் நீளமும் முன்னூறு மைல் அகலமுங்கொண்ட "மடகாஸ்கர்" என் றொரு தீவிருக்கின்றது. அதில், இன்றைக்கு இருபதினாயிரமாண்டு களுக்கு முன், முன் சொன்ன ஹாவேயி நிகிரோவரிலும் நாகரிகங் குறைந்தவரான ஒரு ஜாதியார் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் வீடுக ளெல்லாம் பனையோலையால்; அணிவது சிப்பிகளுங் கூழாங் கற்களும். ஹாவேயித் தீவில் துணிமணி யணிந்து வந்தார்கள். இவர்கள், தோற் கௌபீனங்களுஞ் சல்லடங்களுந் தவிறத் துணி யென்ற பொருளையே கண்டவரல்லர்; ஹாவேயரிலுங் கொடியவர்; மிகவும் முரடர்; ஈன இரக்க மில்லாதவர்.

இவர்களுடைய மதம் மிகவும் பயங்கரமானது. அத்தீவுக் குள், கடலிலிருந்து பிரிந்த ஒரு பெரிய உப்பேரி யிருந்தது. அதில், ஒரு பெரிய கப்பல் வண்ணத்தில், பந்துபோல் உருண்ட ஒரு பயங்கரமான எட்டுக்காற் பிராணி வசித்துக் கொண்டிருந்தது. அதன் வயசு அவ்விடத்தில் யாருக்குந் தெரியாது. இருநூறுக்குமே லிருக்குமே யொழியக் குறையாது. அது எப்போதும் நீரிலேயே வாழ்வது. காண மிகவும் அருவருப்பானது. கிளிமூக்கைப்போன்று, உடம்புக்குத் தக்க வண்ணத்தி லமைந்த கூரிய பெரிய மூக் கை யுடையது. கால் ஒவ்வொன்றும், இரண்டு பனை நீளத்தில், அடி

பருத்து நுனி சிறுத்து, வடிவத்திலும் பனேயையே போன்றிருக்கும். இந்த அழகிய ஜெந்து பண்டைக் காலத்துக் கடற் பிராணிகளி லொன்றெனத் தெரிகிறது. தங்கள் கடவுள் இந்தப் பிராணியின் மேல் ஆவேசித்திருப்பதாக அத்தீவார் கொள்கை.

இந்தப் பெரிய மிருகத்தையே தெய்வமாகக் கொண்ட அவ்வி டத்து மனிதமிருகங்கள், இதற்குப் பூஜை செய்யும் முறைமையிலி ருந்து பேய்ப்பிறப் பென்றே சொல்லத் தகுவர். இந்தக் கடவுளுக்கு, உயிரோடுள்ள மானிடரே நித்திய நைவேத்தியம். ஒரு நாளைக் கொரு மனிதன் வீதம் இந்த மிருகத்திற் கிரையாக ஏரிக்குள் தள்ளி விடுவார்கள்: உற்சவ காலங்களில் ஒன்றுக்கு மேல் மாட்டுவார்கள். யுத்தக் கைதிகள் உள்ளபொழுது ஊராருக் குபத்திரவ மில்லை. இல்லாத பொழுது ஊருக்குள்ளேயே ஆள் தேட வேண்டும். பலியைத் தெரிந்தெடுக்க வேண்டியது பூசாரிகள் வேலை. தம் மைப் பொருட்படுத்தாதவரைச் சமயங்கண்டு கடவுளுக்குப் பொங் கல் வைத்து விடுவார்கள். செயலுள்ளோர், பூசாரிக்குக் கப்பமும் பதிலுக்கு ஆளுங் கொடுத்துத் தப்பித்துக் கொள்வர். போரில் அவர்கள் மிகவுந்தீரராயினும், இந்தக் கொடிய ஏற்பாட்டினால், எந்த நிமிஷத்திலுந் தன் சீட்டுக் கிழிபடு மென்ற திகிலும், அதுகாரண மாகச் சித்தப்பிரமை போன்ற அனேக வியாதிகளும் அவ்விடத்தில் எப்பொழுதும் எல்லாரிடத்திலுங் குடிகொண்டிருந்தன. சிலர் இத் திகிலினாலேயே பித்துப் பிடித்து மெய் மறந்த நிலைமையில் தாங்க ளாகவே ஏரிக்குள் போய் இறங்கி விடுவார்கள்; இவர்களுக்குப் பெரிய பக்த ரென்று பெயர்.

இத்தகைய மனிதருக்குள், கி. மு. 22978-ம் வருஷத்தில், ரோகிணி, பழைய ஆயிலியருக்கே பெண்மகவாக வந்து பிறந்தாள். ஆயிலியர் அவ்விடத்தில் வேட்டையில் பேர் பெற்ற ஒரு வீரர். ஆகவே ஆண் மக்களுக் காசைப் பட்டவர். வேட்டைக்குதவாத ரோகிணியை சிறிதுங் கவனிப்பவரல்லர். பெண்மக்கள் பேரில் பாசம் வைத்த தாய் மாத்திரம் ரோகிணியைப் பிரியத்தோடு பாதுகாத்து வந்தாள். அழகுவாய்ந்த ரோகிணி, பருவம் வந்ததும், அவடத் தில் தன் பந்துக்களுக்குள்ளேயே பிறந்திருந்த மங்களனைக் கண்டு அடங்காத காதல் கொண்டாள். இம்மங்களனே முற்பிறப் பில் ரோகிணிக்கு மகனாகப் பிறந்திருந்தவன். அவனுக்கும், பண்டு தாய் பேரில் வைத்திருந்த பாசத்தின் பலனாக, இந்தப் பிறப்பி லும், ரோகிணியைக் கண்டதும் அவள் பேரிலன்பு பெருகவே, இரு வருங் கலியாணஞ் செய்து கொள்ள தீர்மானித்துக் கொண்டார்கள். ஆனால், ஆயிலியர் அவர்கள் விவாகத்திற்கு உடன்படாமல், வாலி பம் நீங்கின வேறொருவனுக்கு மகளை விற்றுவிட்டார். இம்மருமக னுடைய மூத்தமனைவி அஷ்டமி. அவள் போன பிறப்பில் ஆணா யிருந்ததும், ரோகிணியா லனுபவித்த துன்பங்களும் நன்றாக ஞாப கத்தி லிருக்கலாம். அந்த அஷ்டமியும் ரோகிணியும் இப்பொழுது சக்களத்திக ளானார்கள்.

சக்களத்திமார் சரித்திரங்கள் நம்மவர்கள் எத்தனையோ கண்டு மிருப்பார்கள், கேட்டு மிருப்பார்கள். ஆகையால் இவர்களுடைய அனுபோகத்தைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. அஷ்டமியம்மாள் மூத்த குடியாள் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினவள். கணவனைக் கைக்குள் வைத்து ஆட்டிக் கொண்டிருந்தவள். புதிய சக்களத்தியின் வாழ்வைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருப்பவளல்ல. கணவன் ரோகிணியின் இளமையில் காதல் கொண்டிருந்தரை, அவளுக்கு மவள் பிள்ளைகளுக்கும் அஷ்டமி அதிகமாக ஒன்றுஞ் செய்ய முடியாமற் போனாலும், தன் பேரில் பழிவராத விதங்களிலெல்லாம் அவர்களைப் படுத்திவந்தாள். கொஞ்ச நாட்களில், சதய மென்ற வோர் பெண்ணைக்கண்டு காமங் கொண்ட அவர்கள் கிழட்டுக்கணவன், ரோகிணியை அலட்சித்து மற்றவளைப் பின்பற்றவும், அதற்குச் சம்மதிக்காத பெற்றோர்கள் சதயத்தை வேறொருவனுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்து விட்டார்கள். (இந்தச் சதயமே போன பிறப்பில் ரோகிணி செய்கையால் பைத்தியங் கொண்டிறந்த பெண்.) காமக் கோட்டி கொண்ட கிழவன், காரியம் முற்றுப் பெறுமையால் வீட்டிலுள்ளோரை வருத்தத் தொடங்க, அஷ்டமியும் அவனோடு சேர்ந்து இல்லாத கதைகளைச் சொல்லி, ரோகிணிக்கு விரோதமாய் அவனை ஏவிவைத்தாள். இருவருமாக இளையாளையும் பிள்ளைகளையும் இம்சிக்காத நாள் கிடையாது. அவர்கள் வழங்கிய அடிக்கும் மிதிக்குங் கணக்கில்லை. அன்னுகாரம் வயிறு நிறைய இட்ட நாளில்லை. ரோகிணிக்கோ, தன் துன்பம் போதாமல் தன் பிள்ளைகள் படும் பாட்டையுங் காணக் கணவன் வீடு பூலோக நரகமாயிற்று.

இந்த நிலைமையில், இன்னும் இளமை நீங்காத ரோகிணிக்குப் பழைய காதலனாகிய மங்களன் மேல் மனம் நாட இருவருக்கும் அந்தரங்க அன்னியோன்னியம் உண்டாயிற்று. அதையறிந்த அஷ்டமியானவள், சமயம் நோக்கியிருந்து இருவருங் கூடியிருக்கும் வேளையில் கணவனைக் கொண்டு காட்ட, கிழவன் கோபாவேசங் கொண்டு, ரோகிணி கண்முன்னேயே மங்களனைத் தடிக்கத் தடிக்க மழுவால் துண்டு துண்டாக வெட்டி எட்டுக்கால் மிருகத்திற்கு இரையாகக் கொண்டுபோ யெறிந்தான். ரோகிணியைத் தன்வீட்டு அடிமைகளி லொருத்தியாக்கி அஷ்டமி கையிலொப்புவித்தான். அவள் அடிமையாக இருபது வருடம் பட்ட பாட்டை எடுத்துச் சொல்ல முடியாது. சக்களத்தியா யிருக்கும் போதே ரோகிணியைச் செக்கிலிட்டாட்டிய அஷ்டமியம்மாள், இரண்டு ஜென்மமாகக் கதம்பித்தின்ன ஏங்கிக் கொண்டிருக்கும் அடிமையை என்ன தான் செய்திருக்க மாட்டாள்! இருபது வருஷமும், நித்தியகண்டம் பூரணயுசென்று நாள் கழித்து வந்த ரோகிணி, கடைசியாய்த் தனக்கு விதித்த கொடுமைகளைச் சகிக்க மாட்டாமல், சக்களத்தி கண்ணுக்குத் தப்பிச் சாகவழியுங் காணுதவளாய்த் தானிட்ட பயிரையே அறுப்பதறியாமல், அஷ்டமி மேலாங்காரங் கொண்டு, அவள் பிரியப் பேரனாகிய ஐப்பசி யென்னும் பையனைப் புலால்

